JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

Volume 15 | Issue 08 |
October 2024 |
Mohan C. Lazarus |
Annual Subscription ₹ 100 |
Single Copy ₹ 10



இருளான உலகில்,
கிறிஸ்துவாகிய ஒளி வீச எழும்பிப்

# பிரகாசியுங்கள்!

# வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்ரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், **9750955547** என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாக தெரியப்படுத்துங்கள்.

அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். **youth.jesusredeems.com** என்ற **website** மூலமாகவும் ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்.



## சந்தா விவரம்

தனிப்பிரதி ₹ 10/-

ஆண்டு சந்தா ₹ 100/-

ஆயுள் சந்தா ₹ 1000/-




இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com

# தலைவாசல்

## எனக்கு மிகவும் பிரியமான வாலிப மகனே(ளே)!

**Isawa** என்னும் ஒரு இன மக்கள் Northern Nigeriaவில் வாழ்ந்து வருகிறார்கள். அந்த இனத்தைச் சார்ந்த ஒரு வாலிபன், ஒவ்வொரு நாளும் வீடுகள் தோறும் சென்று தேவையற்ற பொருள்களைச் சேகரித்து, அதில் உள்ள Plastic பொருட்களை விற்று அந்த வருமானத்தில் வாழ்ந்து வந்தான். ஒருநாள் ஒரு பணக்கார வீட்டிற்குள் நுழைந்து பொருட்களைச் சேகரிக்கும்போது அந்த வீட்டு எஜமானன், இவனுடைய அழுக்கான உடையையும், அழுக்கான பெரிய Plastic பையையும் பார்த்து, "உள்ளே வராதே வெளியிலேயே நில்லு, உன்னைப் போன்ற பிச்சைக்காரர்கள் எங்களைப் போன்ற பணக்காரர்கள் வீட்டிற்கு வரவே கூடாது" என்று மிகவும் கடுமையாகப் பேசிவிட்டார். மறுநாள் அந்தப் பணக்காரர் தன்னுடைய விலையுயர்ந்த Diamond Watchஐ தொலைத்து, வீடு முழுவதும் தேடி கிடைக்காததினால் மிகுந்த கோபத்துடன் இருந்தார்.

அச்சமயம் மறுபடியும் அந்த வீட்டிற்கு இந்த வாலிபன் குப்பைகளைச் சேகரிக்க சென்றான். அப்பொழுது அந்தப் பணக்காரர் கோபத்தோடு, 'Gateக்கு வெளியே நில், உள்ளே வராதே, ஏற்கெனவே எனது Diamond Watchஐ காணவில்லை' என்று கடினமாய் பேசினார். மறுநாள் இந்த வாலிபன் அந்தப் பணக்காரர் வீட்டின் கதவு ஓரம் தயங்கித் தயங்கி நிற்பதைப் பார்த்த வீட்டு எஜமான், அந்த வாலிபனைப் பார்த்து 'என்ன' என்று கேட்டதும், தன் கையில் வைத்திருந்த Diamond Watchஐ காண்பித்து, இது உங்களுடையதா? என்று கேட்டான். உடனே அந்தப் பணக்காரர், 'இது என்ன, இதனுடைய மதிப்பு என்னவென்று உனக்குத் தெரியுமா?' என்று கேட்டார். அதற்கு அந்த வாலிபன், "அதெல்லாம் எனக்குத் தெரியாது, உங்கள் வீட்டு குப்பையிலிருந்து இதை எடுத்தேன், எனவே உங்களிடம் கொடுக்க வந்தேன்" என்றான். உடனே அவர், "இது மிகவும் விலையுயர்ந்த Diamond Watch; இதை நீயே வைத்திருந்தால், மிகப்பெரிய பணக்காரன் ஆகியிருக்கலாமே! ஏன் உனக்கு அதை வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் வரவில்லை?" என்று கேட்டார். அதற்கு அந்த வாலிபன், **"நான் ஒரு ISAWA, நான் இயேசுவை சார்ந்தவன்,"** அதனால் எனக்கு உரிமை இல்லாத எந்தப் பொருளையும் நான் விரும்புவதும் இல்லை, எடுப்பதும் இல்லை என்றான். அந்த வாலிபனின் உறுதியான வார்த்தையினால் அந்தப் பணக்காரர் வியந்து போனார்.

**அன்பான வாலிப மகனே, மகளே! கிறிஸ்து என்கிற ஒளியை பின்பற்றுவதோடு மட்டுமல்லாமல், அந்த ஒளியை தனக்குள்ளிருந்து பிரகாசிக்கச் செய்கிறவனே உண்மையான கிறிஸ்துவை உடையவன். இன்றைக்கு கிறிஸ்துவின் ஒளியை உலகெங்கும் வீச, இருளான உலகத்தில் வெளிச்சம் கொடுக்கிற, இப்படிப்பட்ட சாட்சியுள்ள வாழ்க்கை வாழும் ISAWA போன்ற வாலிபர்கள் இயேசுவுக்குத் தேவை.**

**வாலிபனே! நீயும் பிரகாசிக்க வேண்டும்! உன்னைப் போலப் பல வாலிபர்களும் எழும்பிப் பிரகாசிக்கப் பிரயாசப்பட வேண்டும்!**

கிறிஸ்துவின் பணியில்
**மோகன் சி. லாசரஸ்**







"இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத் 5:16).

சாட்சி தொகுப்பு: பெனிட்டா

# என் திறமை அல்ல; தேவக் கிருபையே!!



**தென் தமிழகத்தில் பிறந்து, ஆங்கிலமே படிக்கத் தெரியாமல், மிகவும் பிரயாசப்பட்டு கற்றுக்கொண்டு, ஆங்கிலத்தில் First Class Student என certificate வாங்கி, இன்றைக்கு நுனி நாக்கில் ஆங்கிலம் பேசி அனைவருடைய மனதிலும் நீங்காத இடம்பெற்று வரும் சகோதரர் அஜித் பினோன் அவர்களின் சுவாரஸ்யமான நேர்காணல். வாங்க கேட்கலாம்!**

**உங்கள் குடும்பம்பற்றிச் சொல்லுங்களேன்?**

நான் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள யாக்கோபுரத்தில் திரு. யோசேப்பு, திருமதி. வளர்மதி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தேன். எனக்கு 3 சகோதரர்கள் இருக்கிறார்கள். நாங்கள் ஒரு கிறிஸ்தவ குடும்பம் என்பதால், எனது அம்மாவின் வளர்ப்பு மற்றும் ஆலோசனையின்படி சிறுவயதிலிருந்தே ஆலயத்திற்கு ஒழுங்காகச் சென்று வருவேன். ஆனால் எனக்கும் இயேசுவுக்கும் எந்தச் சம்மந்தமும் இல்லை.

**சூப்பர்... ஒரு அழகான குடும்பம் உங்களுக்குக் கிடைத்தது. சரி உங்கள் சிறு பிராயம் மற்றும் பள்ளிப் படிப்பைப் பற்றிச் சொல்லுங்களேன்?**

நான் சிறு வயதில் இருந்தே TV பார்பது மற்றும் லேப்டாப்பில் Game விளையாடுவதில் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தேன்.



இதனால் எனக்கு 8ம் வகுப்பு படிக்கும் வரை படிப்பில் ஆர்வம் இல்லாமல், ஏதோ பள்ளிக்குச் சென்று வருவேன். 9ம் வகுப்பு ஆரம்பித்தபோது, எனது ஆசிரியர் ''யார் யார் 9ம் வகுப்பில் அனைத்துப் பாடங்களிலும் வெற்றி பெறுகிறார்களோ, அவர்கள் மட்டும்தான் 10ம் வகுப்பிற்கு செல்ல முடியும்'' என்று சொன்னார். இதைக் கேட்டவுடன் மிகவும் பயந்து போனேன். எனக்கு




ஆங்கிலம் மற்றும் கணக்குப் பாடங்கள் மிகவும் கடினமானவை, படித்தாலும் புரியாது. ஆங்கில பாடம் என்றாலே ஒரு வெறுப்பாகத்தான் இருக்கும். ‘கணக்கும், ஆங்கிலமும் வராதே; என்ன செய்வது?’ என்று தெரியாமல் இருக்கும்போது தான் இயேசுவை தேட ஆரம்பித்தேன். ‘‘இயேசப்பா நீர்தான் என்னை எப்படியாவது காப்பாற்ற வேண்டும்’’ என்று ஜெபித்தேன். அதுமட்டுமல்லாமல், எங்கள் தெருவில் அற்புத மேபல் என்கிற பாட்டியம்மா எல்லோரிடமும் அன்பாகப் பேசுவதோடு, விசுவாசமான வார்த்தைகளைச் சொல்லுவார்கள். ஒருநாள் அவர்கள் என்னை அன்பாக விசாரித்தபோது, நான் என்னுடைய பிரச்சனைகளைச் சொன்னேன். அப்பொழுது அவர்கள்,’ தம்பி நீ ஒருமுறை எழுதுவது, பத்துமுறை வாசிப்பதற்கு சமம்’ என்று எனக்கு ஒரு நல்ல ஆலோசனையைக் கொடுத்தார்கள். அதாவது படித்ததை ஒருமுறை எழுதிப் பார்க்க வேண்டுமென்று சொன்னார்கள். எனக்காகத் தொடர்ந்து ஜெபிக்கவும் செய்தார்கள்.

**இயேசுவைத் தேட ஆரம்பித்து, ஜெபித்து ஆலோசனைப் பெற்றது என்ன வித்தியாசத்தை ஏற்படுத்தியது?**


ஆங்கிலம் எனக்குச் சுத்தமாக வராது என்பதால், எழுதி எழுதிப் பார்த்து மனப்பாடம் செய்து அப்படியே போய்த் தேர்வு எழுதுவேன். ஒரு சில வார்த்தைகள் எனக்கு வாசிக்கவே தெரியாது. அப்படி மிகவும் கஷ்டப்பட்டு படித்தும் நிறைய Spelling Mistakes வரும். எனக்கு எப்பொழுதெல்லாம் தேர்வு இருக்கிறதோ, அப்பொழுதெல்லாம் அற்புத மேபல் பாட்டியிடம் சொல்லி ஜெபிப்பேன். கொஞ்ச நாட்களில் நான் Game விளையாடுவதையும், டிவி பார்ப்பதையும் முற்றிலும் நிறுத்தி விட்டேன். வேதத்தை வாசிக்க ஆரம்பித்தேன் வேதத்தை வாசிக்க வாசிக்க எனக்குள் ஒரு நம்பிக்கை வர ஆரம்பித்தது. அதுவரைக்கும் ‘‘என்னால் படிக்க முடியுமா? என் வாழ்க்கை அவ்வளவுதானா? பத்தாம் வகுப்பு நான் வெற்றி பெறுவேனா? நம்முடைய எதிர்காலம் எப்படி இருக்குமோ?’’ என்றெல்லாம் சிந்தித்த நாட்கள் உண்டு. ஆனால் எனக்குள் இருந்த தாழ்வு மனப்பான்மையைக் கர்த்தர் மாற்றி எனக்கு ஒரு பரிபூரண விடுதலையைக் கொடுத்தார். நான் 10ம் வகுப்பில் 371 மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற்றதோடு, பதினொன்றாம் வகுப்பு படித்து, 12ஆம் வகுப்பில் 312 மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெற்றேன். இது என்னால் உண்டானது அல்ல; எல்லாம் தேவ கிருபையே!!



**ஓகே... நீங்கள் மிகவும் கஷ்டப்பட்டு படித்துப் பள்ளியில் வெற்றிப் பெற்றீர்கள். உங்களுடைய கல்லூரிப் படிப்பைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்?**

12ஆம் வகுப்பு முடித்துச் சென்னையில் உள்ள ஒரு யூனிவர்சிட்டியில் BBA Aviation management சேர தேவன் உதவி செய்தார். இந்தக் கல்லூரியில் சேர வேண்டுமானால் 50% மதிப்பெண்கள் எடுத்திருக்க வேண்டும். எனக்கு 52% மதிப்பெண்களைக்






கொடுத்து அந்தக் கல்லூரியில் சேர தேவன் உதவி செய்தார். 'நான் உன்னை நல்ல வேலை ஸ்தலத்தில் வைப்பேன்' என்று எனக்குத் தேவன் கொடுத்த தரிசனத்தை விசுவாசித்து, பெரிய யூனிவர்சிட்டியில் இந்தக் கோர்ஸ் எடுத்தேன். ஆனால் இங்குத் தமிழ் தவிர, எல்லா பாடமும் ஆங்கிலத்தில் தான் படிக்க வேண்டும், ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்று எல்லோரும் சொன்னார்கள். இந்தக் கல்லூரியில் படிக்க வேண்டுமானால் ஒன்றரை லட்சம் fees மற்றும் ஒரு லட்சம் ஹாஸ்டல் fees கட்டிப் படிக்க வேண்டும் என்பதால் என் பெற்றோரும், ''உன்னால் முடியுமா'' என்று என்னிடம் கேட்டார்கள். அப்போது நான் ''இயேசப்பா தரிசனத்தில் சொன்னதை கட்டாயம் நிறைவேற்றுவார், எப்படியாவது கஷ்டப்பட்டு படித்து முடிக்கிறேன்'' என்று சொன்னதால், எனது பெற்றோர் Fees கட்டி கல்லூரிக்கு அனுப்பி வைத்தார்கள். முதல் 3,4 மாதங்கள் மிகவும் கஷ்டப்பட்டேன். ஆங்கிலம் எனக்குச் சுத்தமாகத் தெரிய வில்லை. என் வகுப்பில் எல்லோரும் ஆங்கிலத்தில் தான் பேசுவார்கள். எனக்கு மட்டும் ஆங்கிலம் பேசவோ, படிக்கவோ வராது. நான் நண்பர்கள் மத்தியில் ஆங்கிலத்தில் ஏதாவது பேச முயற்சி செய்து பேசினாலும், கிண்டல் செய்வார்கள். அப்போதெல்லாம் மிகவும் மனம் உடைந்து போன சூழ்நிலையில், இரவில் Roomல் வந்து இயேசப்பாவிடம் அழுது ஜெபிப்பேன். 6 மாதத்திற்கு பிறகு first செமஸ்டர் தேர்வு ஆரம்பிக்க இருந்ததால் நான் அதற்காக மிகவும் பிரயாசப்பட்டேன்.




**சரி... ஆங்கிலம் படிக்கப் பிரயாசப்பட்ட நீங்கள், தேர்வை எப்படி சந்தித்தீர்கள்? எல்லாப் பாடங்களிலும் வெற்றி பெற்றீர்களா?**

நான் தேர்வை எப்படி எதிர்கொள்வது என்று கலக்கத்தோடு இருந்தபோது, எனது தகப்பனார் ESV ஆங்கில பைபிள் வாங்கி கொடுத்து வாசிக்கச் சொன்னார்கள். அது எல்லோரும் புரிந்து கொள்ளும் அளவிற்கு மிகவும் இலகுவாக இருக்கும் என்பதால் தான் அந்தப் பைபிள் வாங்கி கொடுத்தார்கள். ஆனால் அதையுமே என்னால் படித்துப் புரிந்து கொள்ள முடியவில்லை. அப்பொழுது ஒருநாள் ஜெபித்துவிட்டு வரும்போது, google translate App மூலமாகக் கற்றுக் கொள்ளலாம் என்கிற ஆலோசனையைத் தேவன் கொடுத்தார். அப்படித்தான் கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். முதல் 3,4 மாதங்கள் Grammar class, Youtube, நியூஸ் பேப்பர் என ஆங்கிலம் கற்றுக்கொள்ள நிறைய முயற்சிகள் எடுத்தேன். ஆனால் எனக்கு எதுவுமே புரியவில்லை. ஒருநாள் மிகவும் மனமுடைந்து ஆண்டவர் சமூகத்தில் அழுது விட்டு, வேதத்தை எடுத்து முதலாவது, ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் (In the beginning, God created the heavens and the earth) என்று சின்ன சின்ன வசனங்களைப் படிக்க ஆரம்பித்தேன். அப்போது தான் grammar என்ன என்பது தெரிய ஆரம்பித்தது. உண்மையைச் சொல்லப்போனால், பைபிளை படித்துதான் நான் basic grammar கற்றுக்கொண்டேன். அதுமட்டுமல்லாமல் ஆங்கிலத்தில் பேசுகிற நல்ல நண்பர்களை இயேசு எனக்குக் கொடுத்தார். அவர்கள் ஆங்கிலத்தில் பேசுவதைக் கேட்டுக் கேட்டுக் கொஞ்சம் கொஞ்சமாகக் கற்றுக்கொள்ள தேவன் கிருபை கொடுத்தார். முதல் செமஸ்டரில் எல்லாம் தெரிந்து தேர்வு எழுதவில்லை. எனக்குத் தெரிந்ததை கடினமாகப் படித்து அதை மனப்பாடம் செய்து எழுதி வெற்றி பெற்றேன். ஒரு பாடம் மட்டும் arrear வந்தது. அதை அடுத்த செமஸ்டரில் எழுதி வெற்றி பெற்றேன்.

**சூப்பர்... இவ்வளவு பிரயாசப்பட்டு ஆங்கிலம் கற்றுக் கொண்டு உங்களுடைய கல்லூரி படிப்பை முடித்தீர்களா? இப்பொழுது என்ன செய்கிறீர்கள்?**

ஆங்கிலமே தெரியாத நான், இயேசப்பா சொன்னார் என்ற ஒரே காரணத்தினால் அந்தப் பாடத்தை எடுத்துப் படித்தேன். கடைசி semesterல் Air Ticketing and fare construction என்கிற

பாடத்தில் centum எடுக்கத் தேவன் கிருபை செய்தார். இயேசப்பா எனக்கு ஞானத்தைக் கொடுத்து, ஆசீர்வதித்து First Class Student எனச் certificate வாங்கி, நல்ல பெயருடன் 2021 ஆம் ஆண்டு எனது கல்லூரிப் படிப்பை முடிக்க உதவி செய்தார். படித்து முடித்து ஆறு மாதங்கள் எந்த ஒரு வேலையும் இல்லாமல் அநேக இன்டர்வியூக்களில் கலந்து கொண்டேன். எல்லா சுற்றிலும் தகுதி பெறுவேன். ஆனால் கடைசியில் ஏதாவது ஒரு தவறு செய்து அதில் செலக்ட் ஆகாமல் வெளியே வருவேன். இயேசப்பாவிடம், ''நீங்க தான் இந்தக் கோர்ஸ் எடுத்துப் படிக்கச் சொன்னீங்க, நான் படித்து விட்டேன், நான் படித்தப் படிப்புக்கு ஏற்ற வேலை இல்லை என்றாலும், ஏதாவது ஒரு சின்ன வேலையாவது தாரும்'' என்று ஜெபித்தேன். ஏழாவது மாதம் ஒரு இன்டர்வியூவில் கலந்துகொண்டு, அதில் நான் செலக்ட் ஆனேன். நான் என்ன கோர்ஸ் எடுத்துப் படித்தேனோ, அதற்கேற்ப சென்னை ஏர்போர்ட்டில் வேலை கிடைத்து. தற்போது நான் சென்னை International ஏர்போர்ட்டில் customer service executiveஆக வேலை பார்த்து வருகிறேன். கர்த்தர் எனக்கு வாக்குரைத்தபடியே, இன்றைக்கு உயர் பதவியில் இருக்கும் அதிகாரிகள், வெளிநாட்டவர், வேறு மாநில அதிகாரிகள் மற்றும் கிரிக்கெட் சினிமா பிரபலங்களோடு ஆங்கிலத்தில் பேசும் அளவிற்கு, அநேக ஆயிரங்கள் மத்தியில் என்னை மிகவும் உயர்த்தி வைத்திருக்கிறார்.




**சூப்பர்... ஆரம்பத்தில் இயேசுவுக்கும் உங்களுக்கும் சம்மந்தமே இல்லாமல் இருந்தீர்கள், இப்பொழுது உங்களை உயர்த்தின தேவனை எப்படி நினைத்துப் பார்க்கிறீர்கள்?**

நான் அவ்வப்போது வேதம் வாசித்து, ஜெபித்து, சபைக்குச் சென்று வந்தாலும், 12ஆம் வகுப்பு படிக்கும்போது தான் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு இயேசப்பாவுக்கு என்னை முழுவதும் அர்ப்பணித்தேன். தேவனுக்கு அர்ப்பணித்த நாள் முதல் தேவன் மேல் மிகுந்த அன்பும், வைராக்கியமும் எனக்கு ஏற்பட்டது. அன்றிலிருந்து தேவன் அநேக தரிசனங்களைக் கொடுத்து என் விசுவாசத்தை பெலப்படுத்தினார். என் பள்ளிப்பருவத்தில் என்னை அழகாய் வழிநடத்தி வெற்றியோடு முடிக்க உதவி செய்தார். நான் கல்லூரியில் படிக்கும்போது என் நண்பர்கள் பல பாவ பழக்கங்களுக்கு அடிமையாக இருந்தனர். ஆனால் இயேசு என்னை அதிலிருந்து விலக்கிப் பாதுகாத்து நடத்தினார். எந்த ஒரு பாவக் காரியங்களிலும் என்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல், என்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்து ஒப்புக்கொடுத்ததினால், கர்த்தர் என்னை எல்லா தீங்குக்கும் விலக்கிப் பாதுகாத்து நடத்தி வந்து தம்முடைய சித்தத்தை என் வாழ்வில் நிறைவேற்றினார். அவற்றையெல்லாம் நினைத்து நான் ஒவ்வொரு நாளும் தேவனைத் துதிக்கிறேன்.

**சரி பிரதர்... வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

**முதலாவது, அர்ப்பணிப்பு இருக்க வேண்டும்.** ஏதோ தேவைக்காக மட்டும் இயேசப்பாவைத் தேடாமல், அனுதினமும் அவருடன் தொடர்பு இருக்க வேண்டும். நமக்கு என்ன தேவை என்பதை அவர், நாம் பிறப்பதற்கு முன்பே அறிந்து வைத்திருக்கிறார். எனவே நாம் கேட்கும்போது தான் அவர் பதில் கொடுப்பார்.

**இரண்டாவது, தேவனுக்கு தெரியப் படுத்த வேண்டும்.** எனக்கு ஆங்கிலம் வரவில்லை என்று அவருக்குத் தெரியப்படுத்தினேன். கர்த்தர் இன்றைக்கு வெளிநாட்டவருடன் சரளமாக ஆங்கிலத்தில் பேசும் அளவிற்கு எனக்கு ஞானம் கொடுத்தார்.

**மூன்றாவது, தேவ சித்தத்தை அறிந்து,** அதற்கு நம்மை ஒப்புக்கொடுத்து, அதற்கு ஏற்றபடி பிரயாசப்பட்டு செயல்படும்போது எவ்வளவு பெரிய மலையாக இருந்தாலும் அதைச் செய்து முடித்து உங்களை எல்லாவற்றிலும் மேன்மையாக வைப்பார்.

அன்பான வாலிபர்களே! சகோதரர் அஜித், தேவனுக்கு தன்னை அர்ப்பணித்து, அவருடைய இயலாமையை தேவனுக்கு தெரியப்படுத்தி, தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்ததினால், இன்றைக்கு கர்த்தர் அவரைப் பிரகாசிக்க வைத்திருக்கிறார். இன்றைக்கு நீங்களும் கூட என்னால் பிரகாசிக்க முடியவில்லையே என்று சோர்ந்துபோய் இருக்கிறீர்களா? உங்கள் பிரச்சனைகளைத் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். கர்த்தர் உங்களையும் அவரைப் போலப் பிரகாசிப்பிக்கச் செய்வார்!!

ஆலோசனை: அவி

Heart Beat



# ஆபத்திற்கு ஆசைப்படாதே!



நான் Bsc கல்லூரிப் படிப்பைப் படித்து முடித்திருக்கிறேன். சிறு வயதில் இருந்தே எனது மாமாமீது எனக்கும், என்மீது அவருக்கும் காதல் உண்டானது. அவர் நான் உன்னைத் திருமணம் செய்து கொள்கிறேன், நாம் சந்தோஷமாக வாழலாம் என்று ஆசைக்காட்டி அவர் வலையில் சிக்க வைத்திருந்தார். அதனால் எனது கனவு பாதையாகிய ஆசிரியர் பணியைத் தூர தள்ளி, முழுக்க முழுக்க என் மாமா தான் உலகம் என்று வாழ்ந்தேன். ஆனால் என் மாமா அவருடன் படித்த தோழியின் தங்கையைக் காதலித்து வந்திருக்கிறார். அது எனக்கோ, என் குடும்பத்திற்கோ தெரியாது. 6 மாதத்திற்கு முன்பு அவர்கள் இருவரும் திருமணம் செய்து கொண்டு, சந்தோஷமாக இருக்கிறார்கள். ஆனால் என்னால் அவரை மறக்க முடியவில்லை. இன்னும் நான் அவரைத் திருமணம் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறேன். அவரும் நான் உன்னை இரண்டாவதாகத் திருமணம் செய்கிறேன் என்று சொல்கிறார். நான் என்ன செய்வது? - கார்த்திகா, கர்நாடகா.

அன்பு சகோதரி கார்த்திகா, உங்களுடைய சூழ்நிலை எனக்கு நன்கு புரிகிறது. ஒரு பக்கம் காதலித்தவரை இழந்து விட்டோமே என்ற வருத்தம்; மறுபக்கம் இப்படி ஆசைக்காட்டி துரோகம் செய்து விட்டாரே என்ற கோபமும், துக்கமும் உங்கள் இருதயத்தை கவ்விப் பிடித்திருப்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.



கார்த்திகா, உங்கள் வாழ்க்கையில் எற்பட்ட ஏமாற்றமும், துரோகமும் உங்கள் இருதயத்தை உடைத்ததால், நீங்கள் வீழ்ச்சியின் விளிம்புக்குப் போயிருக்கலாம். ஆனால் அந்தச் சோர்வு, தவறான மற்றும் விபரீதமான முடிவுகளை எடுக்க உங்களை அழுத்தக் கூடாது. திருமணமான ஒருவரை நீங்கள் நினைப்பதும், திருமணம் செய்ய விரும்புவதும் மிகத் தவறான செயல். அந்த எண்ணத்தை நீங்கள் வளர விட்டால் பெரும் ஆபத்தாக மாறிவிடும். மேலும் எந்த நபர் உங்களைக் காதலித்து ஏமாற்றினாரோ, அதே நபர் உங்களை இரண்டாவதாகத் திருமணம் செய்கிறேன் என்று சொல்வதும் மிகவும் மோசமான செயல். அது கட்டின மனைவிக்கு அவர் செய்யும் துரோகம்.

எனவே இப்படிப்பட்ட அசுத்தமான செயலுக்கு ஒருநாளும் துணை போகக் கூடாது. ஆனால் இந்தத் துயரத்திலும், துக்கத்திலும் சோர்ந்து போகாமல் மீண்டு வெளியே வர வழி உண்டு. சிறுவயதிலேயே இவரைத்தான் திருமணம் செய்ய வேண்டுமென்று கட்டின கற்பனை கோட்டை உடைந்து விட்டதே என்று யோசிக்காமல், உங்களுக்கு ஒரு அழகிய வாழ்க்கை உண்டு என்ற நம்பிக்கையுடன் ஒரு புதிய பயணத்தை ஆரம்பிக்கலாமே! கார்த்திகா, நீங்கள் எழுவதும், வீழ்ந்து கிடப்பதும் உங்கள் கையில் தான் உள்ளது.

## இதிலிருந்து எழும்ப என்ன செய்யலாம்?

- மறக்க வேண்டிய காரியத்தை மறந்துதான் ஆக வேண்டும்.
- உங்களுடைய மாமா இப்பொழுது இன்னொரு பெண்ணின் கணவர். அவரை நினைப்பதும், அவர் நினைவாக இருப்பதும் ஒழுக்கத்திற்கு மாறான செயல். இது நம்முடைய கலாச்சாரத்திற்கும் நடைமுறை வாழ்க்கைக்கும் ஒத்துவராது.
- உங்கள் மாமாவைத் தொடர்பு கொள்வதை தவிர்க்கலாம். அதோடு அவர் நினைவாக இருக்கும் எந்தப் பொருளையும் வைத்துக் கொள்ள வேண்டாம்.
- தற்பொழுது உங்களது திருமணத்தைப் பற்றி யோசிக்காமல், உங்கள் கனவு பாதையாகிய ஆசிரியர் பணியைத் தொடர முயற்சி செய்யுங்கள். உங்கள் மனம் ஆசிரியர் பணியின் மீது திரும்பும்போது பழையக் காரியங்களை யோசிக்காமல் இருக்க வாய்ப்பு உண்டு.
- யாருக்குத் தெரியும், நீங்கள் ஆசிரியர் படிப்பை முடித்து ஒரு நல்லாசிரியர் விருது வாங்கும் அளவிற்கு வாழ்வின் உச்சத்திற்குகூடப் போகலாம்.

## ஒருவேளை எழும்பத் தவறினால்...

- மாமாவின் நினைவில் மறுபடியும் அவரைத் தொடர்பு கொள்ள முயற்சிப்பீர்கள். திருமணம் ஆனவருடன் உள்ள அந்த உறவு, காலப்போக்கில் கள்ளதொடர்பாகவும் மாறும்.
- அவர் உங்களைத் திருமணம் செய்து கொள்கிறேன் என்று சொல்வது, உங்கள்மீது உள்ள அன்பின் நிமித்தமாக அல்ல, அது ஒரு தவறான இச்சை என்னும் உணர்வு என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.
- அப்படி செய்தால், தான் கட்டின மனைவிக்கு அவர் செய்யும் மிகப்பெரிய துரோகம். உங்களால் அந்தப் பெண்ணின் வாழ்க்கையும் சீரழியும்.
- ஆனால் உங்கள் மாமா உங்களைத் தான் கடைசி வரை நேசிப்பார், கைவிடமாட்டார், விட்டு விலகிச் செல்லமாட்டார் என்று எந்த உத்திரவாதமும் இல்லை.
- இதனால் ஒரு பக்கம் அவமானம், மறுபக்கம் தவறான பெண் என்ற பட்டம் கிடைக்க வாய்ப்பு உண்டு. இறுதியில் இப்படியொரு வாழ்க்கை தேவையா? என்று நீங்கள் தவறான முடிவுக்குச் செல்ல வழி உண்டு.

**எனவே சிந்தித்து செயல்படுங்கள். மீண்டும் மீண்டும் மாமாவைக் குறித்து தவறான எண்ணம் உங்களைப் பாதிக்காதவண்ணம் சீக்கிரமாய் சரியான தீர்மானத்தை எடுத்து முன்னேறிச் செல்ல முற்படுங்கள்.**

**கார்த்திகா, இந்த இடுக்கமான வாசல்வழியாய் கடந்துபோவதால் நிச்சயமாமாய் உங்களுக்கு நல்ல திருமண வாழ்க்கை காத்திருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் புதிய பெலனைத் தந்து, சீரான முடிவு எடுக்க இயேசு உதவி செய்வார். நீங்கள் இயேசுவை விசுவாசிக்கும்போது உங்கள் வாழ்க்கையில் பெரிய காரியத்தை செய்ய அவரால் முடியும்!**

''எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்'' (நீதி. 4:23)



# தானியேலின் ஜெபம்

செய்தி: மோகன் சி. லாசரஸ்

**வேதத்தில் தானியேல், ஒரு முக்கியமான காரியத்திற்காக அதாவது தன்னுடைய மக்கள், அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட வேண்டும் என்று தேவனிடம் ஜெபம் பண்ணினார். தானியேல் தேவ சமூகத்தில் காத்திருந்து ஜெபித்த ஜெபமும், அந்த ஜெபத்திற்குரிய பதிலை அவர் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட விதமும், வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது (தானியேல் 9:2,3,20).**

**தானியேலின் ஜெபத்தைக் குறித்தும், அதற்கு உண்டான பதிலைக் குறித்தும் தெரிந்துகொள்வதற்கு முன்பாக, இந்த மாதம் தானியேலைக் குறித்து சில காரியங்களை நாம் அறிந்து கொள்ளலாம்.**

## தானியேலின் வைராக்கியம்



பாபிலோன் தேசத்து மன்னனாகிய நேபுகாத்நேச்சார் என்பவன், எருசலேமின் மீது படையெடுத்துச் சென்று, அதைக் கைப்பற்றி, சுட்டெரித்துப் போட்டு, அங்கிருந்த விசேஷமான, அழகான, ஞானமுள்ள, புத்திசாலிகளாக இருந்த சில வாலிபர்களை, தன்னுடைய தேசத்தில் வைத்துப் பயிற்றுவித்து, தன்னுடைய இராஜ்ஜியத்தில் அவர்களைப் பயன்படுத்த வேண்டும் என்று, தன் தேசத்திற்கு அவர்களை அடிமைகளாகக் கொண்டு போனான். அந்த அடிமைகளில் தானியேலும் ஒருவர்! எருசலேமிலிருந்து தானியேல் பாபிலோனுக்கு கொண்டு வரப்பட்டபோது, அவருக்குப் பதினெட்டு வயது இருக்கலாம் என்பதாக வேத அறிஞர்கள் கூறுகின்றனர். ஆனால் தானியேல், கர்த்தரிடம் கேள்வி கேட்கவில்லை. அந்நிய தேசத்தில் வாழ்ந்த தானியேலுக்கு ஒரு வைராக்கியம் இருந்தது. தானியேல், ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம்பண்ணும் திராட்சை ரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்திக் கொள்ளலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான் (தானி. 1:8).

தானியேலோடுகூட கர்த்தர் இருந்தபடியினாலும். கர்த்தருடைய பிரசன்னத்தை தானியேல் உணர்ந்திருந்தபடியினாலும், உணவுக் காரியத்திலும் அவர் மிகவும் உறுதியாக இருந்தார். 'நான் என்னைத் தீட்டுப் படுத்திக்கொள்வதில்லை' என்றும், 'தேவனை நான் துக்கப்படுத்துவதில்லை' என்றும், தன் இருதயத்தில் திட்டமாகத் தீர்மானம் பண்ணினார்.

## தானியேலின் மூன்று வேளை ஜெபம்

தானியேல் தினமும் மூன்றுவேளை கர்த்தருக்கு முன்பாக முழங்கால்படியிட்டு, ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான் (தானி. 6:10). தினமும்



மூன்று வேளை ஜெபம் பண்ணுகிற ஒரு அருமையான பழக்கத்தைத் தானியேல் தன் இளம் வயதிலிருந்தே கடைபிடித்தார். 'நேரம் கிடைக்கும்பொழுதெல்லாம் ஜெபம் பண்ணுவேன்' என்று சொல்லாதபடி, தினமும் மூன்றுவேளையும், குறிப்பிட்ட நேரத்தில் பலகணிகளைத் திறந்து, எருசலேமைப் பார்த்து ஜெபம் பண்ணுவது, தானியேலுக்கு ஒரு பழக்கமாக இருந்தது. அந்த ஜெபத்தை அவர் விடவே இல்லை. தன்னை கறைபடாதபடி தன் இருதயத்தைக் காத்துக்கொள்வதில் தீர்மானமும், அனுதின ஜெபத்தில் ஒரு ஒழுங்கும் தானியேலுக்குள் காணப்பட்டது.

## தானியேலின் விசுவாச ஜெபம்



தானியேலுக்குள் ஒரு விசுவாசம் வேரூன்றி இருந்தது. அதாவது, சிங்கக்கெபியில் தான் போடப்பட்டபோது, சிங்கத்தின் வாயையும் கர்த்தர் கட்டுவார் என்கிற ஒரு விசுவாசம் தானியேலுக்கு இருந்ததை வேதாகமத்தில் நாம் வாசிக்கிறோம் **(தானி. 6:23).** தானியேலுக்குள்ளிருந்த விசுவாசத்தைப் போல, ஜெபிக்கிற தேவபிள்ளைகளாகிய நமக்குள்ளும், சாத்தானை நாம் எதிர்த்து ஜெபித்தாலும், விக்கிரக ஆவிகளை எதிர்த்து ஜெபித்தாலும், அவைகளால் நம்மைச் சேதப்படுத்த முடியாது என்கிற விசுவாசம் காணப்பட வேண்டும். காரணம், உலகத்திலிருக்கிற சாத்தானைக் காட்டிலும், நம்மோடு இருக்கிற கர்த்தர் மகாப் பெரியவர்.

## தானியேலின் ஜெப நண்பர்கள்



தானியேல் தனித்து ஜெபம் செய்கிற ஒரு மனிதர்தான்! அதே நேரத்தில், எருசலேமிலிருந்து கொண்டுவரப்பட்ட சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்கிற வாலிபர்களும் தானியேலோடுகூட சேர்ந்து ஜெபிக்கிற பழக்கம் உடையவர்களாக இருந்தார்கள். இராஜாவின் சொப்பனத்திற்கு அர்த்தம் சொல்ல வேண்டிய ஒரு கட்டாய சூழ்நிலை வந்தபோது, தானியேல் தன் நண்பர்களோடு இணைந்து ஜெபித்த அந்த இராத்திரியிலேயே, சொப்பனத்திற்கான அர்த்தம் வெளியரங்கமாக்கப்பட்டது. கர்த்தர் தானியேலுக்குக் காரியத்தை விளங்கச்செய்து, அவருக்கு ஒரு பெரிய வெற்றியைக் கொடுத்ததை நாம் வேதத்தில் பார்க்கிறோம் **(தானி. 2:17-19).**

தானியேலுக்கு ஜெப நண்பர்கள் இருந்தது போல், உங்களோடு சேர்ந்து தேசத்திற்காக, ஆத்துமாக்களுக்காக ஜெபிக்கக் கூடியவர்களை நீங்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டும். உங்களோடு சேர்ந்து, ஆவியில் ஜெபிக்கக்கூடியவர்களை நீங்கள் இணைத்துக்கொள்ள வேண்டும்.

**அன்பான வாலிபர்களே! தானியேல் மூன்றுவேளை ஜெபித்ததினால் தன்னை கறைபடாமல் பார்த்துக் கொண்டார். ஜெப நண்பர்களை வைத்திருந்தார். நீங்களும் ஒரு ஐக்கியத்தில் இணைந்து ஜெபிக்கும்போது, தானியேலைப் போல் வல்லமையான ஒரு ஜெப வீரனாக, வீராங்கனையாக எழும்ப முடியும்! ஆமென்!!**

எச்சரிப்பின் செய்தி: டேனிட்

# நைசா நரகம்!

பகுதி - 7

Hello Friends, நம்மை நரகத்திற்கு கொண்டு போகப் பிசாசு விரிக்கும் வலைகளைப் பற்றிக் கடந்த சில மாதங்களாகப் பார்த்து வருகிறோம். கடந்த மாதம் ஜலத்தினாலும் ஆவினாலும் பிறப்பதைப் பற்றித் தெளிவாக அறிந்து கொண்டோம். இந்த மாதம் சாத்தான் விரிக்கும் மற்றொரு வலையாகிய பயத்தை குறித்து தெரிந்து கொள்ள போகிறோம்.

## பயம்

'பயம்' என்ற இந்த வார்த்தையைப் படித்தவுடனே நமக்கு எதுக்கு வம்பு பேசாம அடுத்த page போயிடுவோம் என்று நினைக்கிறீர்களா?? தைரியமாய் படிங்க; உங்க lifeல பெரிய change உண்டாகும். பயம் ஒரு பாவம் என்று வேதம் சொல்லுகிறது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பயம் வரும்; சிலருக்கு தனியாக இருந்தா பயம், இருட்ட பாத்தா பயம், heightஅ பார்த்தா பயம், ரத்தத்தை பார்த்தா பயம், suddenஆ பலமாக sound கேட்டா பயம், family member யாராவது timeக்கு வீட்டுக்கு வரலைன்னா பயம், நிழலைப் பார்த்தா பயம், திடீர்னு யாராவது நம்மள தொட்டா பயம். இன்னும் சிலருக்கு படிப்பைக் குறித்து, examஐ குறித்து, திருமண வாழ்க்கைக்குள் நுழைவதைக் குறித்து, பிள்ளைகளைக் குறித்து, எதிர்காலத்தைக் குறித்து, மனிதர்களைக் குறித்து பயம். சிலருக்கு மரண பயம்; travelல accident ஆகிவிடுமோ என்ற பயம். இப்படி பல காரியங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம்.



நாம் எதிர்பார்க்காத ஒன்று திடீரென்று நடக்கும்போது நமக்குப் பயம் வருகிறது. நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்தக் கடைசிக் காலத்தில் நாம் கேள்விப்படுகிற சம்பவங்கள் எல்லாம் நமக்குப் பயத்தை கொடுக்கிறதைப் போலத்தான் இருக்கிறது. யுத்தம், பஞ்சம், கொள்ளை நோய் எனப் பல கடைசி கால அடையாளங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இனி உலகம் எங்கும் நம்மைப் பயப்படுத்துகிற காரியங்கள் நடந்து கொண்டே தான் இருக்கும். ஆனால் இவைகளுக்கெல்லாம் நாம் பயப்படக் கூடாது என இயேசு சொல்லி இருக்கிறார். யுத்தங்களையும் கலகங்களையுங் குறித்து நீங்கள் கேள்விப்படும்போது, பயப்படாதிருங்கள் **(லூக்கா 21:9).**

## யாருக்கு பயப்படக் கூடாது?

வேதம் சொல்லுகிறது ''சரீரத்தைக் கொலைசெய்து, அதன்பின்பு அதிகமாக ஒன்றும் செய்யத் திராணியில்லாதவர்களுக்குப் பயப்படாதிருங்கள்'' என்று **(லூக்கா 12:4).** அதாவது மனிதர்களுக்குப் பயப்படக் கூடாது. நம்மில் அநேகருக்கு ஒரு சில காரியங்களைச் செய்யும்போது அது சரியானதாகவே இருந்தாலும், மற்றவர்கள் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்ற பயம் அதிகமாயிருக்கும். உதாரணமாக, கிறிஸ்தவர்களாகிய நாம் பொது இடங்களில் மற்றவர்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்கத் தயங்குகின்றோம். இதற்குக் காரணம் மற்றவர்கள் நம்மை என்ன நினைப்பார்கள், அல்லது ஏதாவது செய்து விடுவார்களோ என்ற பயம். இப்படி மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும் **(நீதி. 29:25)** என்று வேதம் சொல்லுகிறது.

மனிதர்களுக்குப் பயம் வருவது இயல்பான ஒரு காரியம். ஆனால் அந்தப் பயத்திலேயே நிலைத்திருப்பது தான் ஆபத்து. இது நம்மை அநேக பாவங்களைச் செய்ய வைக்கும்.
பாருங்கள் வேதத்தில்,

- சவுல் ராஜா ஜனங்களுக்குப் பயந்து அவர்கள் சொல்லைக் கேட்டுப் பாவம் செய்தார். **(I சாமு. 15:24)**
- அதே சவுல் வில் வீரருக்குப் பயந்து தன் உயிரை மாய்த்துக் கொண்டான்.**(I சாமு. 10:34).**
- மறுரூப மலையின் காட்சியைக்கண்டு பேதுரு பயந்தபடியினால் பேசுவது என்னவென்று அறியாமல் பேசினான் **(மாற்கு 9:6).**
- அதே பேதுரு தன்னை கொன்றுவிடுவார்கள் என்று உயிருக்குப் பயந்து இயேசுவை மறுதலித்தான். **(மத். 26:60-74).**



பயம் பிசாசிடமிருந்து வருகிறது. எல்லா பயதிற்கு பின்னாடியும் பிசாசு தான் கிரியை செய்கிறான். பயம் நமக்கு வேதனையை உண்டாக்கும் **(I யோவான் 4:18).** பயம் தூக்கத்தை கெடுத்துவிடும், சரீர ஆரோக்கியத்தை கெடுத்துவிடும், குடும்ப சந்தோஷத்தைப் பாதிக்கும், படிப்பைப் பாதிக்கும், வேலையைப் பாதிக்கும், மொத்தத்தில் நம் வாழ்க்கை முழுவதுமாகப் பாதித்துவிடும்.

எனவே தான் நம்முடைய எதிராளியாகியப் பிசாசானவன், ஏதாவது ஒரு விதத்தில் நம்முடைய வாழ்க்கையில் பயத்தை கொண்டு வந்து நம்மை முடக்கிவிட நினைக்கிறான். பயம் நாம் இந்தப் பூமியில் வாழும்போது மட்டும் நமக்குப் பாதிப்பைக் கொண்டு வராது, நாம் மரித்தபிறகும் நமக்குப் பாதிப்பைக் கொண்டுவரும் அதாவது பரலோக பாக்கியத்தை தடுக்கும். ''பயப்படுகிறவர்கள் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்'' என்று வேதம் சொல்லுகிறது. **(வெளி. 21:8).**

## வேதம் கொடுக்கும் ஆலோசனை

- பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள் **(ரோமர் 8:15).**
- தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் **(2 தீமோ. 1:7).**

இதை வாசித்துக் கொண்டிருக்கும் அன்பான வாலிப சகோதரனே, சகோதரியே! ஒருவேளை நீங்கள் ஏதோ ஒரு காரியத்தைக் குறித்து பயந்து, சமாதானம் இல்லாமல் தூக்கத்தை இழந்து, தனிமையில் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறீர்களா? பயத்திலிருந்து விடுதலை பெறுவது மிகவும் அவசியம். பயத்திலேயே இருந்து கொண்டிருந்தால் பயம் மன அழுத்தமாக மாறும், மன அழுத்தம் உங்களைத் தற்கொலைக்கு நேராக வழி நடத்தும். உங்களைப் பயத்திலிருந்து விடுவிக்க இயேசு சிலுவையில் பிசாசை ஜெயித்தார் **(எபி. 2:14,15).** அவரால் உங்களுக்கு விடுதலை கொடுக்க முடியும்.



**பிசாசானவனுக்கு பயப்படுகிறவர்களை மிகவும் பிடிக்கும். எனவே தான் இந்தப் பயம் என்கிற வலையை விரித்து நைசாக நம்மை நரகத்திற்கு கொண்டு போகத் தீவிரமாகச் செயல்படுகிறான். அதனால் விழிப்பாக இருந்து பயத்திற்கு இடம் கொடாமல் பரிசுத்த ஆவியானவரின் துணையோடு கூட அதை மேற்கொண்டு நரக தண்டனைக்குத் தப்பித்துக் கொள்ளுங்கள்.**

**Okay friends, அடுத்த மாதம் நரகத்திற்கு ஏதுவான மற்றொரு காரியத்தைக் குறித்து தெரிந்து கொள்ளுவோம்.**



# சிப்பிக்குள் முத்து

## ஆக்கில்லா, பிரிஸ்கில்லா

வேதாகம கதாபாத்திரம்: சுமா

**இளம் வாலிபர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள். சிப்பிக்குள் முத்து என்ற தொடரின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த சந்தோஷம். இம்மாதம் ஆக்கில்லா, பிரிஸ்கில்லா என்ற தம்பதிகளைப் பற்றி பார்க்க இருக்கிறோம்.**

### அறிமுகம்

- ஆக்கில்லா, பிரிஸ்கில்லாவைப் பற்றி அப்போஸ்தலர் 18:2, 3 வசனங்கள் அறிமுகப்படுத்துகின்றன.
- இவர்கள் இருவரும் இத்தாலியாவிலிருந்து புதிதாக கொரிந்து பட்டணத்திற்கு வந்த தம்பதிகள்.
- ஆக்கில்லா ஒரு யூதன். கணவன் மனைவி இருவரும் இணைந்து கூடாரம் செய்யும் தொழில் செய்கிறவர்கள்.

### பவுலுடன் ஆக்கில்லா – பிரிஸ்கில்லா

- பவுல் கொரிந்துவிற்கு மேற்கொண்ட இரண்டாவது மிஷனெரி பயணத்தின்போது இவர்களைச் சந்தித்தார்.
- பவுல் கொரிந்து பட்டணத்தில் இருந்த சில நாட்கள் அவர்களோடு இணைந்து கூடாரம் செய்கிற தொழிலை செய்து வந்தார்.
- பவுல் தங்களோடு இருக்கிறதை சந்தோஷமாக எண்ணி, பவுலிடமிருந்து இயேசு கிறிஸ்துவை குறித்து அநேக காரியங்களை தெரிந்து கொண்டு, இருவரும் இயேசுவுக்காக நிற்கத் தொடங்கினார்கள்.

### ஊழிய பாதையில் ஆக்கில்லா–பிரிஸ்கில்லா

- ஆக்கில்லா பிரிஸ்கில்லா ஒரே ஆவியுடையவர்களாக தேவனுக்கு ஊழியம் செய்தார்கள்.
- கிறிஸ்துவுக்குள் உடன் வேலையாட்களாய் ஊழியம் செய்தனர்.
- அப்பொல்லோ என்ற தேவ மனிதன் ஆவியில் அனலுள்ளவனாய் இயேசுவை போதித்ததைப் பார்த்து, கணவன் மனைவி இருவரும் அவனை ஏற்றுக் கொண்டு இயேசு கிறிஸ்துவை இன்னும் திட்டமும் தெளிவுமாக அவனுக்கு விவரித்தார்கள் (அப்.18:26).
- ஒருவர் தேவனுக்காக எழும்பும்போது பொறாமை கொள்ளாமல், அவர்களை இன்னும் அதிகமாக உற்சாகப்படுத்தினார்கள்.
- பவுலின் பிராணனுக்காகத் தங்கள் ஜீவனையும் கொடுக்கத் துணிந்து தேவனுடைய ஊழியக்காரனுடன் இணைந்து இயேசுவுக்காகச் செயல்பட்டனர் (ரோமர் 16:3,4).

### நாம் கற்றுக் கொள்ள வேண்டியது

- ஆக்கில்லா பெயர் எங்கெங்கு வருகிறதோ, அங்கெல்லாம் பிரிஸ்கில்லாவின் பெயரும் சேர்ந்தே வரும்.
- இருவரும் இணைந்து குடும்பமாக வேலை செய்வது மாத்திரமல்லாமல், இயேசுவுக்காகவும் இணைந்தே நின்றார்கள்.
- தங்களுடைய வீட்டைச் சபையாக மாற்றி தேவ நாமத்தை உயர்த்தினார்கள்.
- நாம் என்ன வேலை செய்தாலும் தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்று எடுத்துக்காட்டாக வாழ்ந்தனர்.

**அன்பான வாலிபர்களே! நீங்களும் கூட ஆக்கில்லா - பிரிஸ்கில்லா போல, இயேசுவோடு இணைந்து ஒரே ஆவியுள்ளவர்களாய் அவருக்காக செயல்படுங்கள்!**



புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

வேதாகமத்தில் இயேசு செய்த அற்புதங்களில் உள்ள எண்களைக் கண்டறிந்து சரியான விடையை வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.

Q&A

## வினாக்கள்:

1. கானாவூர் கலியாண வீட்டில், இயேசு கூறியப்படி தண்ணீரை எத்தனை கற்சாடிகளில் நிரப்பினார்கள்?

2. பெதஸ்தா குளம் அருகே இயேசு சுகமளித்த மனுஷன் எத்தனை வருஷம் வியாதிப்பட்டிருந்தான்?

3. திபேரியாக்கடலின் அக்கரையிலே திரளான ஜனங்களுக்குப் போஜனம்கொடுக்கும்படி எத்தனை பணத்துக்கு அப்பங்களை வாங்கி கொடுக்கக் கூடுமோ என்று சீஷர்கள் இயேசுவிடம் கேட்டார்கள்?

4. யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு திரும்பிவந்தபோது, ராஜாவின் மனுஷரின் குமாரன் இயேசுவின் வார்த்தையினால் குணமடைந்த அற்புதம் எத்தனையாவது என்று வேதம் குறிப்பிடுகிறது?

5. சீஷர்கள் சென்ற படவு நடுக்கடலிலே எதிர்க்காற்றினால் அலைவுப்பட்டபோது, காற்றை அமர்த்தும்படியாய் இயேசு கடலின் மேல் நடந்து வந்தது எந்த வேளையாயிருந்தது?

6. கலிலேயாவில் உள்ள கானா ஊரிலே எந்த நாளிலே நடந்த கலியாணத்தில் இயேசு முதலாவது அற்புதம் செய்தார்?

7. ஏழு அப்பங்களையும் சிறுமீன்களையும் கொண்டு இயேசுவினால் போஷிக்கப்பட்ட ஜனங்கள் எத்தனை நாட்களாக அவருடன் இருந்ததாக இயேசு கூறினார்?

8. பேதுருவின் தூண்டிலில் அகப்படும் எத்தனையாவது மீனை எடுத்து அதின் வாயிலிருக்கும் வெள்ளிப் பணத்தை வரிசெலுத்தும்படி இயேசு கூறினார்?

9. கப்பர்நகூமில் இராஜாவின் மனுஷனுடைய ஜுரம் இயேசுவின் வார்த்தையினால் எந்த மணிநேரத்தில் குணமாக்கப்பட்டது?

10. இயேசு சுகமளித்த நிமிரக்கூடாத கூனியாயிருந்த ஸ்திரீ, அதற்கு முன் எத்தனை வருஷம் வியாதிப்பட்டிருந்தாள்?

### கடந்த மாத விடைகள்

1. பிலாத்து
2. தீமோத்தேயு
3. ஆனோக்கு
4. ஈசாக்கு
5. யாக்கோபு
6. பென்யமீன்
7. சிமியோன்
8. ரூபன்
9. பூவாள்
10. அகியா




### கடந்த மாத வெற்றியாளர்

சகோதரி சசிரேகா, அம்பத்தூர்

அவர்களை வாழ்த்துகிறோம்.

**பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.10.2024**

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

சகோ. ஜெய்ப்ரகாஷ்



# பிரகாசியுங்கள்!

இருளில் இருந்த அநேக நகரங்கள் இன்று ஒளிரும் விளக்குகளால் பிரகாசம் அடைந்துள்ளன. எங்குப் பார்த்தாலும் மின்னும் வண்ண வண்ண விளக்குகள் மனிதனுக்குள் இருக்கும் இருளின் பயத்தை போக்கியுள்ளது என்று தான் சொல்ல வேண்டும்.



ஒளிரும் விளக்கு இருளை அகற்றி பாதைக்கு வெளிச்சம் கொடுக்கிறது. சாலைகளில் ஒட்டப்பட்டிருக்கும் மின்னும் ஸ்டிக்கர்கள், ஒளிபட்டவுடன் பிரகாசித்து வாகனங்கள் விபத்து ஏற்படாமல் சரியான பாதையில் செல்ல உதவுகின்றன. எப்பொழுதெல்லாம் அதன்மீது ஒளிபடுகிறதோ, அப்பொழுது அவைகள் பிரகாசிக்கின்றன. வாகனங்கள் சென்றவுடன், பிரகாசித்த ஸ்டிக்கர்கள் சாதாரண பேப்பராக மாறி விடுகின்றன. காலா காலமாக இருளின் ஆதிக்கத்தில் இருந்த மக்களை, எப்போதும் பிரகாசிக்கச் செய்யும் ஜீவ ஒளியாக இயேசு இந்த உலகத்திற்கு வந்தார். **"நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை அடைந்திருப்பான் என்றார்" (யோவான் 8:12).**

நான் உலகத்தின் ஒளி என்று கூறிய இயேசு கிறிஸ்து மனிதர்களைப் பார்த்து, **"நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" (மத்தேயு 5:14)** என்று சொன்னார். அதாவது ஒளியாகிய இயேசு நமக்குள் இருந்தால், நாமும் பிரகாசித்து இருளில் இருக்கும் ஜனங்களுக்கு வெளிச்சம் தரும் விளக்காக இருப்போம். நம்மைச் சுற்றி இருக்கும் ஜனங்கள் பாவத்திலும், சாபத்திலும், தரித்திரத்திலும் சிக்கி வெளியே வரமுடியாமல் இருளில் தத்தளித்துக் கொண்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஜனங்கள் மத்தியில் நாம் பிரகாசிக்கிற சுடர்களாக இருக்க வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம். **"அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்" (யோவான் 5:35)** என்று இயேசு யோவான்ஸ்நானனைக் குறித்து சொல்கிறார்.

யோவான்ஸ்நானன் ஒளியாகிய இயேசுவை, இருளில் இருக்கும் ஜனங்களுக்கு அறிமுகம் செய்யும்படி



வந்தான். மக்களைக் கிறிஸ்துவுக்காக ஆயத்தம் செய்து மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானத்தைக் கொடுத்து, அவர்களைக் கிறிஸ்துவாகிய ஒளியினிடத்தில் திருப்பி விட்டான். இயேசுவின் முதலாம் வருகைக்கு ஜனங்களை ஆயத்தப்படுத்த ஒரு யோவான்ஸ்நானன் இருந்தது போல, அவரின் இரண்டாம் வருகைக்கு ஜனங்களை ஆயத்தப்படுத்த, இயேசுவுக்கு நீங்கள் தேவை! இயேசுவை விசுவாசியுங்கள்! உங்களால் பிரகாசிக்கவே முடியாது என்று கூறிய ஜனங்கள் மத்தியில் இயேசு உங்களைப் பிரகாசிக்கச் செய்வார்.

இங்கிலாந்து தேசத்தில் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த வில்லியம் கேரி, வறுமையின் காரணமாகப் பள்ளிப் படிப்பைப் பாதியிலே நிறுத்தி விட்டார். தான் வேலை செய்து வந்த கடையில் இருந்த இந்திய வரைபடத்தைப் பார்த்துத் தினமும் ஜெபித்துக் கொண்டே இருந்தார். இறுதியில் 1793ம் ஆண்டு இந்திய தேசத்திற்கு வந்து, அன்றிலிருந்து இருளில் இருந்த ஜனங்களுக்கு வெளிச்சம் தரும் சுடராகப் பிரகாசித்தார். ஒருமுறை கூடத் தன்னுடைய தாய்நாட்டிற்கு திரும்பிச் செல்லாத இவர், புதிய ஏற்பாட்டை நாற்பதுக்கும் மேலான மொழிகளிலும், இருபதுக்கும் மேலான மொழிகளில் முழு வேதாகமத்தையும் மொழிபெயர்த்து, ஒளியாகிய இயேசுவை அநேகர் அறிந்து கொள்ளும்படி செய்தார். இதுமட்டுமின்றி, இவர் ஏற்படுத்திய செராம்பூர் யூனிவர்சிட்டி என்ற மாபெரும் வேதாகமக் கல்லூரியில் படித்த அநேக ஊழியர்கள் இன்றும் தேவனுக்காக எழும்பிப் பிரகாசிக்கிறார்கள். எங்கோ பிறந்து வளர்ந்த வில்லியம் கேரி இயேசுவை விசுவாசித்து நம் தேசத்திற்கு வந்ததால், அவர் பிரகாசிக்கிற விளக்காய் இருந்தார். உங்களையும் இயேசு பிரகாசிக்கச் செய்வார். ஏனெனில் அவரே, **“உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற... மெய்யான ஒளி” (யோவான் 1:9).** உங்களையும் பிரகாசிக்க வைக்க இயேசுவால் முடியும்...!



பாபிலோன் தேசத்திற்கு அடிமைகளாகக் கொண்டு போகப்பட்ட தானியேலும், அவனுடைய நண்பர்களும் பாவமும், விக்கிரக வணக்கமும், மந்திரவாதிகளின் ஆதிக்கமும் நிறைந்த அந்தத் தேசத்தில் அவர்கள் கர்த்தருக்காகப் பிரகாசித்தார்கள். கர்த்தர் அவர்களைப் பிரகாசிக்க வைக்கக் காரணம், அந்தத் தேசத்தில் காணப்பட்ட பாவப்பழக்கங்களுக்குத் தங்களை விலக்கி ஆண்டவருக்காகப் பிரியமாய் வாழ வேண்டும் என்று தீர்மானம் எடுத்து அதில் உறுதியாய் இருந்தார்கள். அதுமட்டுமின்றி அவர்கள் அனுதினமும் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட்டு தேவனை விசுவாசித்து இருந்தபடியால் அவர்களைப் பாவ இருள் மேற்கொள்ளவில்லை. “அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை; பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை, அவரை அறியவுமில்லை” **(I யோவான் 3:6).** தானியேலும் அவனுடைய நண்பர்களும் கர்த்தருக்குள் நிலைத்திருந்தபடியால் தான் அவர்களால் அந்தத் தேசத்தில் பிரகாசிக்க முடிந்தது. நீங்களும் தேவனை விசுவாசித்து உலகத்தின் பாவங்களுக்கு உங்களை விலக்கிக் காத்துக் கொண்டு பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுவீர்களானால் கர்த்தருக்காகப் பிரகாசிப்பீர்கள்.

**எனக்கன்பான வாலிபர்களே, “கர்த்தர் நம்மைப் பிரகாசிப்பிக்கிற தேவனாயிருக்கிறார்” (சங்கீதம் 118:27). சூரியனை சுற்றி வரும் சந்திரன், சூரியனுடைய ஒளியைப் பெற்று பூமிக்கு வெளிச்சம் தருவது போல, நீங்களும் உலகத்தின் ஒளியாகிய கிறிஸ்துவுக்குள் நிலைத்திருந்து, பாவ இருளில் இருக்கும் ஜனங்கள் மத்தியில் பிரகாசித்து வெளிச்சம் கொடுங்கள்!**

# MOUNT SINAI 2024

(வாலிபர்களுக்கான ஒருநாள் உபவாச கூடுகை)

## அக்டோபர் 31

வியாழக்கிழமை (தீபாவளி தினத்தன்று)

காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை

## சென்னை மண்டலம்

### பேர்ணாம்பட்டில்...



சகோ. சாம் ஜெபராஜ்

எழுப்புதல் ஜெப கூடாரம்
இயேசு நேசிக்கிறார் ஜெபக்குழு
வி .கோட்ட ரோடு

99408 54125

### சென்னையில்...



பாஸ்டர் சரவணன்

உலக எழுப்புதல் ஜெப மையம்
பிரின்ஸ் குஷால் டவர்ஸ்
7வது மாடி, B -Wing
மவுண்ட் ரோடு

9488 475315

### வேலூரில்...



சகோ. சதீஷ்

உலக எழுப்புதல் ஜெப மையம்,
அஜந்தா மஹால்,
வெஸ்ட் காந்தி நகர்,
கனரா வங்கி அருகில்.

94429 79556

### செங்கல்பட்டில்...



பாஸ்டர் லூக்காஸ் சேகர்

மிராக்கிள் ஷெக்கினா
அசெம்பிளி சபை
ஜோதிபா அவென்யூ
திருகழுக்குன்றம் ரோடு

9597 588831 |
97108 09626 | 94884 75315

### இராணிப்பேட்டில்...



பாஸ்டர் இளவரசன்

உலக எழுப்புதல் ஜெபமையம்,
ரயில்வே ஸ்டேஷன் ரோடு,
SMH பின்புறம்,
சீயோன் நகர்,

9500283179

## திருநெல்வேலி மண்டலம்

### நாலுமாவடியில்...



டாக்டர் அன்புராஜன்

தேவனுடைய கூடாரம்
நாலுமாவடி

97509 55547.
04639- 353535

### ஜெபமலையில்...



சகோ. ஜோஷ்வா எஸ்டோவ்

கீழமாதாபுரம்,
தென்காசி - அம்பை மெயின் ரோடு,
தென்காசி மாவட்டம்

83001 31000
97509 55548

### திருநெல்வேலியில்...



பாஸ்டர் ராபர்ட் ரொனால்ட்

சாரா டக்கர் பெண்கள்
மேல்நிலைப் பள்ளி
பாளையங்கோட்டை

90474 80484
97509 55548

### கோவில்பட்டியில்...



பாஸ்டர் பென்னட் கிறிஸ்டோபர்

நம்பிக்கையின் கூடாரம்
ஜெப வீடு,
பாண்டவர்மங்கலம்,

97873 22334
96778 58766

### சங்கரன்கோயிலில்...



சகோ. ஜூடா பென்னி ஹின்

உலக எழுப்புதல் ஜெப மையம்,
ஷக்கினா ஹால், காங்கிரஸ்
பொன்விழா மைதானம் பின்புறம்,
முல்லை நகர்,
இராஜாபாளையம் ரோடு

97509 55548 | 83449 49555

## கேரளா மாநிலம் - திருவனந்தபுரத்தில்



சகோ. அந்தோணி தாஸ்

Love Army Crusade Centre,
Parasuvakkal, Trivandrum.

82815 14822,
99617 94754

# கடலூர் மண்டலம்

## பாண்டிச்சேரியில்...



சகோ. D. ஜெபஸ்டின் சாமுவேல்

உலக எழுப்புதல் ஜெப மையம்
2, கொட்டுப்பாளையம்,
ECR ரோடு, (Tea Time அருகில்)

83444 33800

## கடலூரில்...



சகோ. டேவிட் ஜெபசிங்

உலக எழுப்புதல் ஜெப மையம்
93, நேதாஜி ரோடு,
மணிக்கூண்டு எதிர்புறம்
மஞ்சக்குப்பம்

99651 44000

## திருவாரூரில்...



சகோ. நல்லதம்பி சார்லஸ்

உலக எழுப்புதல் ஜெப மையம்,
S A ரைஸ் மில் காம்ப்ளக்ஸ்
TTP மெயின் ரோடு, புலிவலம்

99767 66322

## விழுப்புரத்தில்...



சகோ. ஜோசப் சுப்பிரமணி

உலக எழுப்புதல் ஜெப மையம்
முதல் மாடி, H.H. காம்ப்ளக்ஸ்
நம்நாடு துணிக்கடை எதிர்புறம்

88705 17324 | 83444 11022

# கோவை மண்டலம்

## கோபிச்செட்டிபாளையத்தில்...



சகோ. ஜெபசிங்

CSI கிறிஸ்து நாதர் ஆலயம் ,
அமலா பள்ளி அருகில்,
கோபி.

97507 22000

## கோவையில்...



சகோ. சதீஷ்

முகவரியை தெரிந்துக் கொள்ள
கீழ்க்காணும் தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும்

89034 05315

## திருப்பூரில்...



சகோ. டேவிட் கணேசன்

T E L C அருள்நாதர் ஆலயம்,
சபாபதிபுரம் ,

94420 82200

## தாராபுரத்தில்...



சகோதரி அனிதா பானு,
சகோதரி வசந்தி பால்

பிஷப் தார்ப் கல்லூரி வளாகம்,
தாராபுரம்

82482 83373

# மதுரை மண்டலம்

## இராமநாதபுரத்தில்...



சகோ. சந்தானம்

வலம்புரி மஹால்,
பழைய பேருந்து நிலையம் அருகில்,
இரயில்வே பீடர் ரோடு

97509 55548

## தேனியில்...



சகோ. ரூபன்

தாவீதின் கூடாரம் ஆராதனை மையம்
ஜே.டி.என். காம்ப்ளக்ஸ்,
வைகை அணை ரோடு,
பெரியகுளம்,

84898 11498,
97509 55548, 94881 45305

## மதுரையில்...



பாஸ்டர் ஜாக் ராபர்ட்

அல்லேலுயா டவர்,
நல்ல சமாரியன் சபை
47,அழகர் நகர் மெயின் ரோடு,
5வது தெரு, கே.புதூர்

97509 55548

## திண்டுக்கல்லில்...



சகோ. சாம் மோசஸ்
சகோதரி டிரினிட்டா சாம்

TELC மண்டபம்
மெக்கில்ஸ் ரோடு

63823 92446 | 90434 22612

# உணர்வுகள் இச்சை (Cravings)

அலசல்: கெத்சி கிளாரின்

வாலிபர்களாகிய நாம் இன்று மிகவும் போட்டி நிறைந்த உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ஒவ்வொரு நாட்களையும் நாம் எதிர்கொள்ள நமக்கு முன்பாக பல சவால்கள் இருக்கின்றன. இதன் மத்தியில் தான் நாம் நம்முடைய உணர்வுகளைப் பலவாறு வெளிப்படுத்துகிறோம்.

அதிலும் குறிப்பாகப் பயம், தனிமை, கோபம், வெறுப்பு, மன அழுத்தம் போன்ற பல எதிர்மறையான உணர்வுகளை அனுபவிப்பராய் நீங்கள் இருந்தால் இந்தப் பகுதி உங்களுக்கே!



Cravings என்றால், ஓர் குறிப்பிட்ட பொருளின் மீது அல்லது உணவின் மீது உண்டாகும் கட்டுப்படுத்த முடியாத வலுவான ஆசை அல்லது ஏக்கம் என்று சொல்லலாம். இதனைத் தமிழில் இச்சை அல்லது ஆசை என்று கூறலாம். இதுவும் ஓர் வகையான உணர்வு ஆகும். இது ஒருவரை அடிமைத்தனத்திற்கு நேராய் இழுத்துச் செல்லும் தன்மையுடையது.

உதாரணமாக,

நள்ளிரவில் பிரியாணி (Midnight Briyani) சாப்பிட வேண்டும் என்ற ஆசையைக் கொண்டுவரும்.





குறிப்பிட்ட வேளை வந்தால், புகை அல்லது மது அருந்த வேண்டும் என்ற ஆசையைக் கொண்டுவரும்.

சிலருக்கு புதிய Bike அல்லது கார் வாங்க வேண்டும் என்ற ஆசையைத் தூண்டும்.



இப்படி கட்டுப்படுத்த முடியாத இந்த உணர்வை எப்படி அடக்கி ஆள்வது என்பதையே இம்மாத பகுதியில் நாம் பார்க்கவுள்ளோம்.

‘‘அப்போ எனக்கு ஆசைகளே இருக்கக்கூடாதா? உலகப்பொருட்கள் நாம் அனுபவிப்பதற்கு தானே! எனக்குப் பிடித்த Bike அல்லது கார் வாங்க நான் விரும்பக்கூடாதா? Friends உடன் சேர்ந்து விதவிதமான உணவு உட்கொள்ள நான் விரும்பக்கூடாதா?’’ இப்படிப்பட்ட கேள்விகள் உங்கள் இருதயத்தில் எழும்புகின்றதா???

**அன்பு வாலிபர்களே! ஆசைகள் மோசமானவை அல்ல. இருப்பினும் அவைகள் இச்சையாக மாறி, கிறிஸ்து இயேசுவின் மீதுள்ள அன்பைக் காட்டிலும் அது மேலோங்கும்போது, அதுவே பிரச்சனையாக மாறுகின்றது.**

# இச்சையின் விளைவுகள்

புகையிலை, இரவு நேர உணவுகள், மது, பிற உலகப் பொருட்கள் என அனைத்தின் மீது உண்டாகும் இப்படிப்பட்ட ஆசைகள், கீழுள்ள சில மாற்றங்களை நம்மிடையே உண்டாக்கும்.



- மனநிலை மாற்றங்கள் (Psychological changes)
- இதயத் துடிப்பு அதிகரித்தல் (Increase in heart rate)
- இரத்த அழுத்தம் (Blood Pressure)





# மேற்கொள்ளச் சில எளிய தீர்வுகள்

நடைப்பயிற்சி, கலைகளைக் கற்றல், நீச்சல், விளையாட்டு, குடும்பத்துடன் நேரம் செலவிடுதல், ஜெபிக்கும் நண்பர்களுடன் ஐக்கியம் கொள்ளுதல், தனி ஜெப நேரத்தை அதிகரித்தல் போன்ற மற்ற முக்கிய காரியங்களில் உங்களை நீங்களே ஈடுப்படுத்திக் கொள்ளும்போது, உங்கள் ஆசைகளை முறியடிக்க முடியும்.

## வேத ஆலோசனைகள்




- உங்கள் சொந்த பலத்தின் மீது சாராமல் கர்த்தருடைய பலத்தை சார்ந்து பரிசுத்த ஆவியானவரின் துணை யோடு ஜெபித்து இச்சையை மேற்கொள்ளுங்கள் (பிலி. 4:13).
- உலக இச்சைகளைத் தவிர்க்க வேத வசனங்கள் மூலம் உங்கள் மனதை புதிதாக்குவதில் கவனம் செலுத்துங்கள் (ரோமர் 12:2).
- இச்சைகளைத் தூண்டக்கூடிய சூழ்நிலைகள் மற்றும் சோதனையான காரியங்களை விட்டு விலகி ஓட முயலுங்கள். சோதனையை மேற்கொள்ளவும் அதிலிருந்து தப்பிச்செல்லவும் கர்த்தர் வழிசெய்வார் என்று விசுவாசியுங்கள் (1 கொரி. 10:13).
- ஜெபம், துதி, ஆராதனை மற்றும் வேத வாசிப்பின் மூலம் தேவனோடுள்ள உறவில் இணைந்திருந்து ஆவியின் கனியாகிய இச்சையடக்கத்தை பயிற்சி செய்யுங்கள் (கலா. 5:22-23).
- இச்சைகள் மிகப்பெரிய தேவையிலிருந்து அல்லது வெற்றிடத்திலிருந்து வருகின்றன என்பதை அறிந்து, தற்காலிக இன்பங்களில் அல்லாமல் தேவனிலே நிறைவு அடையுங்கள் (சங். 107:9).
- உபவாசித்து உடலை ஒடுக்கி ஜெபிப்பதன் மூலம் ஆவி மனிதன் பெலன்கொண்டு, எளிதாக இச்சைகளை மேற்கொள்ள முடியும் (மத். 6:16-18).

**இதை வாசித்துக் கொண்டிருக்கும் அன்பு இளம் நெஞ்சங்களே! உங்களை அடிமைப்படுத்தும் எந்த காரியமாக இருந்தாலும் "NO" சொல்வதற்கு தீர்மானியுங்கள். எடுத்த தீர்மானத்தில் உறுதியாகத் தரித்திருங்கள். இச்சைகளுக்கு அடிமை ஆவதும் அதனை அடக்கி ஆள்வதும், உங்கள் choice. நினைவில் கொள்ளுங்கள்! நீங்கள் அடிமைகள் அல்ல; இராஜாவின் பிள்ளைகள்...!!**

சுவிசேஷ பயணம் ஜெனிபர்

# வீரமுள்ள தீமோத்தேயு

பகுதி-9





Hi friends, எல்லாரும் எப்படி இருக்கீங்க? உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள்! வீரமுள்ள தீமோத்தேயு என்னும் இத்தொடர் மூலம் உங்களைச் சந்திப்பது எனக்கு மிக்க மகிழ்ச்சி.

கடந்த மாதத் தொடரில் அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவிற்கு எழுதின முதலாம் நிருபத்தின் விளக்கத்தையும், பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவை எபேசு சபையைக் கண்காணிப்பதற்கு அனுப்பி, அங்கு அவர் நிறைவேற்றுவதற்காகக் கொடுக்கப்பட்ட பணிகளைப் பற்றியும், ஒரு சபையினுடைய தரிசனத்தைப் பற்றியும் நாம் பார்த்தோம்.

இந்த மாதம் அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபத்தை பற்றி நாம் பார்க்கலாம். வாங்க தொடருக்குள் போகலாம்!

## பின்னணி

கி.பி. 67ம் வருடம் பவுலின் கடைசி நாட்களில் எழுதப்பட்டது தான் தீமோத்தேயு இரண்டாம் நிருபம். பவுல் இந்த நிருபத்தை எழுதுகிறபோது, டஞ்சன் போன்ற இருட்டு நிறைந்த சிறையில் மூன்றாவது முறை அடைக்கப்பட்டு இருந்தார். இந்தக் கடிதத்தின் Speciality என்னன்னா இது பவுல் தனிப்பட்ட முறையில் தீமோத்தேயுவிற்காகவே எழுதின நிருபம்.



## நோக்கம்

பவுலுக்கு தாம் மரிக்கப் போவது தெரிந்ததும், அதற்கு முன் தன் ஆவிக்குரிய மகனாகிய தீமோத்தேயுவை தன்னிடம் வரவைத்து, அவரைப் பார்த்து உற்சாகப்படுத்த வேண்டும் என்ற வாஞ்சையிருந்தது. அதனால் தீமோத்தேயுவை தன்னிடம் வரச் சொல்வதற்காகவும், ஆண்டவர் கொடுத்த ஊழியத்தை எவ்வளவு கவனமாக நிறைவேற்ற வேண்டும் என்றும் இந்த நிருபத்தில் அவருக்குக் கற்றுக் கொடுக்கிறார்.

## தீமோத்தேயுவின் அடையாளம்

பவுல் தீமோத்தேயுவை இந்த நிருபத்தில் பிரியமுள்ள குமாரன் என்று 2 முறை அடையாளப்படுத்துகிறார். அதுமட்டுமின்றி, மாயமற்ற விசுவாசம் கொண்டவர் என்றும், சிறுவயது முதல் வேத எழுத்துக்களை அறிந்தவரென்றும், ஊழியக்காரனென்றும் அடையாளப்படுத்துகிறார். Superல friends...! இளைஞனாகிய தீமோத்தேயு மிகச்சிறந்த அப்போஸ்தலராகிய பவுலிடமிருந்து நற்சாட்சி பெறுகிறார். இன்றைக்கு நம்மையும் பிறர் இவ்வாறு அடையாளப்படுத்துவார்களா என்று நாம் சிந்திக்க வேண்டும்.



## பவுலின் அறிவுரைகள்

பவுல் தீமோத்தேயுவின் மீது கைகளை வைத்தபொழுது அவருக்கு உண்டான தேவ வரத்தை அனல் மூட்டி விடும்படி அறிவுறுத்துகிறார். தீமோத்தேயு பவுலிடம் கேட்ட ஆரோக்கியமான வசனத்தைக் கைகொள்ளவும், அதில் நிலைத்திருக்கவும் அறிவுறுத்துகிறார். பாடுகளில் திடமனதா யிருக்க வேண்டும் என்றும் கூறுகிறார்.

## தீமோத்தேயுவிற்கு கொடுக்கப்பட்ட எச்சரிப்புகள்

- ஊழியத்தில் வரும் உபத்திரவங்களினிமித்தமும், உலக ஆசைகளினிமித்தமும் இடறிப்போன பிகெல்லு, அலெக்சந்தர் என்னும் ஊழியர்கள் மத்தியில் தீங்கநுபவிப்பதில் ஜாக்கிரதையாய் இருக்கும்படி 3 முறை பவுல் எச்சரிப்பு கொடுக்கிறார்.
- தவறான போதனைகளைப் போதிக்கிற போதகர்கள் மத்தியில் சத்திய வசனத்தை நிதானமாய் போதிக்கிற, தேவனுக்கு முன்பாக உத்தமமாய் நிற்கிற ஊழியக்காரனாய் இருக்கவும்,
- தேவையற்ற வீண் பேச்சுகளுக்கும், வாதங்களுக்கும் விலகி இருக்கவும்,
- பாலியத்திற்குரிய இச்சைகளுக்கு விலகியோடவும்,
- சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் வசனத்தை ஜாக்கிரதையாய் பிரசங்கம் பண்ணவும்,
- எல்லாவற்றிலும் மனத் தெளிவு உள்ளவனாய் இருந்து சுவிசேஷகனுடைய வேலையை உண்மையாய் செய்து ஊழியத்தை நிறைவேற்றவும்,
- இடறிப்போன ஊழியர்களைக் குறித்து எச்சரிக்கையாக இருக்கவும் அறிவுறுத்துகிறார்.

## தவறான போதனைகளைக் கையாளும் யுக்தி

தவறான போதனைகளைக் குறித்து வாக்குவாதம் செய்யாமல் கர்த்தருக்கு முன்பாக எச்சரித்துப் புத்தி சொல்லும் படியும், சத்தியத்தை தெளிவாய் போதிக்கும் போதக சமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாய் இருக்கும்படியாகவும், சத்தியத்தை எதிர்த்துப் பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி அவர்களுக்குச் சாந்தமாய் உபதேசிக்கும்படியும் பவுல் தீமோத்தேயுவுக்கு ஆலோசனை கொடுக்கிறார்.



இதுமட்டுமின்றி தான் ஊழிய பாதையில் ஒரு நல்ல போராட்டத்தைப் போராடி ஓட்டத்தை ஜெயத்துடன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக முடித்து விசுவாசத்தை காத்துக் கொண்டது போல், தீமோத்தேயு இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார். தன் சொந்த மகனைப் போல இருந்த தீமோத்தேயுவை சீக்கிரம் காண வேண்டும் என்ற வாஞ்சையில் மாரிக்காலத்துக்கு முன்பே தன்னிடம் வரும்படியாகவும், அவர் வரும்போது பவுல் விட்டு வந்த மேலங்கி, புத்தகங்கள், சுருள்கள் இவைகளை எல்லாம் எடுத்துக் கொண்டு வரும்படியாகவும் கூறுகிறார். இதுவே பவுலினால் தீமோத்தேயுவுக்கு எழுதப்பட்ட இரண்டாவது கடிதம். இது பவுல், தான் மரிப்பதற்கு முன்பு எழுதின கடைசி கடிதம் என்றும் நாம் சொல்லலாம்.

அப்பப்பா! இந்தக் கடிதத்தில் வெறும் நான்கே அதிகாரங்கள் தான், ஆனால் இதில் எத்தனை காரியங்களைப் பவுல் தீமோத்தேயுவிற்கு எழுதியிருக்கிறார் பாருங்கள்! தனக்கு சொல்லப்பட்ட அறிவுரைகள், எச்சரிப்புகள், ஆலோசனைகள் எல்லாவற்றையும் கவனமாய் கேட்டு சிந்தித்து செயல்பட்டதால் தான் தீமோத்தேயு யாராலும் அசைக்க முடியாத பெரிய ஊழியக்காரராகச் சாதிக்க முடிந்தது.

பவுல், ஊழியத்தில் சந்தித்த துன்பங்கள் எல்லாவற்றையும் தீமோத்தேயுவும், பிற ஊழியர்களும் அறிந்திருந்தனர். அவர்களில் சிலர் இடறிப் போய்விட்டனர். ஆனால் இளைஞனாகிய தீமோத்தேயு நிலைத்து நின்றது எவ்வளவு பெரிய காரியம் அல்லவா?

**இந்தக் கடிதம் தீமோத்தேயுவுக்கு மட்டுமல்ல friends... வாலிபர்களாகிய நமக்கும் தான். தவறான போதனைகள் வலம் வந்து கொண்டிருக்கிற இந்த நாட்களில், "ஊழியத்திற்கு வந்தால் ஆசீர்வாதம் மட்டும் தான்; பாடநுபவிக்க தேவை இல்லை" என்று சொல்லுகிற மனிதர்கள் மத்தியில், தீமோத்தேயுவைப் போல நிலைத்து நிற்கவும் தீங்கு அனுபவிக்கவும் நீங்கள் தயாரா? நாமும் இந்த எச்சரிப்புகளையும், ஆலோசனைகளையும் சிந்தித்துப் பார்த்துச் செயல்படுவோம்.**


- வீர சகாப்தம் தொடரும்...

# ஜெபக் கையேடு

ஜெபம்: பெனிட்டா

## வேலை இழப்பு

உளகளவில் கடந்த ஆறு மாதங்களில் மட்டும் லட்சக்கணக்கானோர் வேலை இழந்துள்ளனர். இந்த ஆண்டு தொழில்நுட்ப துறையில் மட்டும் 1.24 லட்சம் பேர் வேலை இழந்துள்ளனர். 2024ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் மட்டும் 34 நிறுவனங்களிலிருந்து 8000 பேர் வேலை இழந்துள்ளனர். இனிவரும் நாட்களிலும் இந்த வேலை இழப்புகள் தொடரும் என்று கருதுகின்றனர். மாத சம்பளம் நிறுத்தப்படுவதால் கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகி அநேகர் மனஉளைச்சலுக்குட் படுகின்றனர். கடந்த ஏழு ஆண்டுகளில் 37 லட்சம் சிறு தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. இதனால் 1.34 கோடி பேர் வேலை இழந்துள்ளனர்.



### ஜெபக்குறிப்புகள்

1) வேலை இழந்துள்ள சுமார் 1.24 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்திட ஜெபியுங்கள்.

2) உலக அளவில் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கவும், வேலை இழப்புகள் தடுக்கப்படவும் ஜெபியுங்கள்.

3) வேலை இழப்பினால் மன உளைச்சலுக்குள்ளாகி இருப்போர் சுகம் பெறவும், அவர்களுக்குத் தகுந்த வேலை கிடைக்கவும் ஜெபியுங்கள்.

4) மூடப்பட்ட சிறுதொழில் நிறுவனங்கள் திரும்ப ஆரம்பிக்கப்பட்டு, வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட அரசு ஆவன செய்யுமாறு ஜெபியுங்கள்.

## விவாகரத்து

இந்தியாவில் 100ல் ஒரு திருமணம் விவாகரத்தில் முடிகிறது. டெல்லி, மும்பை மற்றும் பெங்களூர் போன்ற நகரங்களில் விவாகரத்து விகிதம் 30 சதவீதத்திற்கும் மேல் உள்ளது. விவாகரத்து அதிகம் நடைபெறும் மாநிலங்களில் 18.7 விகிதத்துடன் மஹாராஷ்டிரா முதல் இடத்திலும், கர்நாடகா 11.7 விகிதத்துடன் இரண்டாம் இடத்திலும், உத்திர பிரதேசம் 8.8 விகிதத்துடன் மூன்றாம் இடத்திலும், மேற்குவங்கம் 8.2 விகிதத்துடன் நான்காம் இடத்திலும், டெல்லி 7.7 விகிதத்துடன் ஐந்தாம் இடத்திலும் உள்ளது. தமிழ்நாடு 7.1 விகிதத்துடன் ஆறாம் இடத்தில் உள்ளது.



### ஜெபக்குறிப்புகள்

1) விவாகரத்து வழக்குகள் பதிவு செய்திருக்கும் கணவன் மனைவியர் மீண்டும் சேர்ந்து வாழவும், அவர்களுக்குள் மன்னிக்கும் குணம் உண்டாகவும் ஜெபியுங்கள்.

2) கணவன் மனைவிக்குள் சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், அன்பு, ஐக்கியம் உண்டாக ஜெபியுங்கள்.

3) குடும்பங்களை உடைக்க போராடும் சாத்தானின் திட்டங்கள் அழிக்கப்பட ஜெபியுங்கள்.

4) நீதிமன்றத்தில் தேங்கியிருக்கும் விவாகரத்து வழக்குகள் சீக்கிரத்தில் முடிக்கப்பட்டு, குடும்ப வாழ்க்கை ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

# இஸ்ரேல் போர்

2023 அக்டோபர் முதல் இஸ்ரேல் மீது 7000 ஏவுகணை தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இரண்டு நாடுகளின் எல்லையிலிருந்து சுமார் 2 லட்சம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர். இஸ்ரேல் இதுவரை லெபனானின் 7 இராணுவ தளபதிகளைக் கொலை செய்துள்ளது. இஸ்ரேல் - ஈரான் மோதல் ஏப்ரல் 2024க்கு பிறகு அதிகரித்து இருக்கிறது. இந்த மோதல் எந்த நேரமும் யுத்தமாக மாற வாய்ப்பிருக்கிறது.



## ஜெபக்குறிப்புகள்

1) இஸ்ரேல் - லெபனான் இடையே சமாதானம் உண்டாகவும், ஏவுகணை தாக்குதல்களிலிருந்து பொதுமக்கள் பாதுகாக்கப்படவும் ஜெபியுங்கள்.

2) இரண்டு தேச அரசாங்கங்களின் மீதும் தேவ ஆளுகை உண்டாக ஜெபியுங்கள்.

3) இஸ்ரேல் - ஈரான் இடையே சமாதானம் உண்டாக ஜெபியுங்கள்.

4) இங்கு நடைபெறும் போரினால் சிறுபிள்ளைகள் உயிரிழப்பது தடுக்கப்படவும், இதற்குமேல் மரணங்கள் நடைபெறாமல் தடுக்கப்பட ஜெபியுங்கள்.



# அக்டோபர் 2024

# விவசாயம்

இந்தியாவில் 11.8 கோடி விவசாயிகள் உள்ளனர். கடந்த 2022ம் ஆண்டின் புள்ளி விவரங்களின் அடிப்படையில் இந்தியாவில் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ஒரு விவசாயி தற்கொலை செய்துகொள்கிறார்கள். 2022 ஆம் ஆண்டு, 11,290 தற்கொலை வழக்குகள் பதிவாகியுள்ளதாகத் தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் அறிக்கை (2023) தெரிவிக்கிறது. இது நாட்டில் தற்கொலை செய்து கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கையில் 6.6% ஆகும்.



## ஜெபக்குறிப்புகள்

1) இந்தியாவில் உள்ள 11.8 கோடி விவசாயிகள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

2) கடன் பாரத்தில் சிக்கியிருக்கும் விவசாயிகள் விடுவிக்கப்பட ஜெபியுங்கள்.

3) விவசாயிகளுக்கு நன்மை உண்டாக்கும் திட்டங்களை அரசாங்கம் கொண்டுவர ஜெபியுங்கள்.

4) விவசாயிகள் தற்கொலை செய்வது தடுக்கப்படவும், அவர்களுடைய வாழ்வாதாரம் உயர்த்தப்படவும் ஜெபியுங்கள்.



# எழுப்புதலையும் உபத்திரவத்தையும் பிரிக்க முடியாது!

பகுதி - 3

எழுப்புதலின் செய்தி: ரோசாலி

இந்த எழுப்புதலின் காலத்தில் கர்த்தருக்காக எழும்பிப் பிரகாசிக்கக் கிருபை பெற்ற அன்பு வாலிபர்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த 2 மாதங்களாக 'எழுப்புதலும் உபத்திரவமும்' என்ற தலைப்பில் மணிப்பூர் மாநிலத்தில் நடைபெறும் உபத்திரவங்கள் பற்றியும் எழுப்புதலுக்கு மணிப்பூர் மாநிலம் எவ்வளவு முக்கியம் என்பதையும் வேத ஆதாரத்துடன் அறிந்து கொண்டோம். இந்த மாதம், மணிப்பூர் ஜனங்கள் ஏன் இடம் பெயர்ந்து தற்காலிக இடங்களில் வசிக்கிறார்கள் என்பதைப் பற்றிப் பார்க்கப் போகிறோம்.

மணிப்பூர் மக்கள் ஒருபோதும் மத வேறுபாடுகளைப் பெரிதுபடுத்துபவர்களாக இருந்ததில்லை. குக்கி மற்றும் நாகா சமூகத்தினருடன் இணைந்து வாழ்ந்த மெய்தி மக்கள் தான், குக்கி மக்களுக்கு மாநில நிர்வாகத்தில் கூட ஒரு வலுவான இடத்தை அளித்தனர். ஆனால் தற்போதைய வன்முறைகளில் இருதரப்பிலும் உயிரிழப்புகளும், பாதிப்புகளும் ஏற்பட்டுள்ளன. இதில் சுமார் 60,000க்கும் மேற்பட்ட மக்கள் வசிப்பிடங்களை இழந்து தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளன. அவர்களில் மெய்தி மற்றும் குக்கி சமூகத்தினர் இருவரும் அடங்குவர். வன்முறைகள் தொடங்கிய போதே கர்ப்பிணிகளும் முகாம்களுக்கு அழைத்து வரப்பட்டனர்.

கலவரம், துப்பாக்கிச்சூடு என இன்னும் மணிப்பூரில் அமைதி திரும்பவில்லை. இருதரப்பிலும் சர்வ சாதரணமாக ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது மணிப்பூரில் வன்முறை குறைந்து இருந்தாலும் கூட இன்னும் பிரச்சனை முற்றிலுமாக முடிவுக்கு வரவில்லை. அவ்வப்போது ஒரு சில இடங்களில் மோதல்கள், துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் நடந்து வருகின்றன.மணிப்பூரில் அமைதி திரும்பி, அங்கிருந்து வெளியேறியவர்கள் மீண்டும் சொந்தமண்ணுக்கு திரும்பி அச்சமின்றி இணக்கத்துடன் வாழ வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பு.

**இதைப் படிக்கும்போது, வேதாகமத்தில் ஒரு சம்பவம் நியாபகத்திற்கு வருகிறது.** யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீம் அரசாண்ட காலத்தில் இஸ்ரவேல் ஜனங்களைக் கர்த்தர், பாபிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் கையில் ஒப்புக்கொடுத்தார். அப்படி எருசலேமிலிருந்து பாபிலோனுக்கு கொண்டுவரப்பட்டவர் தான் தானியேல். தானியேல் அந்நிய தேசத்திலும் தேவனுக்கு முதலிடம் கொடுத்து அவர்மேல் விசுவாசம் வைத்து, தேவனுக்காகத் தன் ஜீவனையும் பெரிதாக எண்ணாமல், பக்தி வைராக்கியம் பாராட்டினார். யாதொன்றினாலும் தான் தீட்டுப்படாதவாறும் காத்துக்கொண்டார்.

இவரது நடக்கையினால் ராஜாவாகிய தரியு கர்த்தரை தன் தெய்வமாக ஏற்றுக் கொண்டார். அதுவுமல்லாமல் தன்னுடைய ஆளுகைக்குள்ளானவர்கள் யாவருக்கும் ‘‘தானியேலின் தேவனே இரட்சகர், ஜீவனுள்ள தேவன், அவருக்கு நடுங்கி பயப்பட வேண்டும் என்று தீர்மானம் பண்ணப்படுகிறது’’ என்று அறிவித்தார்.ஆம் பிரியமானவர்களே, அடிமைகளாகக் கொண்டு செல்லப்பட்ட மக்களில் ஒருவரான தானியேலின் மூலம் தரியு ராஜா ஆண்ட பகுதிக்குள் ஒரு எழுப்புதல் வந்தது. இன்று மணிப்பூரில் ஏற்பட்ட கலவரங்களால் மக்கள் சிதறி காணப்படுகிறார்கள். அவர்கள் சிதறியிருக்கிற பகுதியில் உள்ள மக்கள், அதிகாரிகள் போன்றவர்கள் கர்த்தருடைய பிள்ளைகளின் நடக்கைகள் மூலம்



கர்த்தரைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அங்கும் தேவப் பிள்ளைகள் மூலம் எழுப்புதல் பரவப்போகிறது. தீமையையும் நன்மையாக மாற்றுபவர் நம் சர்வ வல்ல தேவன்...!!

**ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்; பஞ்சங்களும் கலகங்களும் உண்டாகும்; இவைகள் வேதனைகளுக்கு ஆரம்பம். நீங்களோ எச்சரிக்கையாயிருங்கள், ஏனெனில் உங்களை ஆலோசனைச் சங்கங்களுக்கு ஒப்புக்கொடுப்பார்கள், நீங்கள் ஜெபஆலயங்களில் அடிக்கப்படுவீர்கள்; என்னிமித்தம் தேசாதிபதிகளுக்கும் ராஜாக்களுக்கும் சாட்சியாக அவர்களுக்கு முன்பாக நிறுத்தப்படுவீர்கள் (மாற்கு 13:8-9).**


# MOUNT SINAI 2024

(வாலிபர்களுக்கான ஒருநாள் உபவாச கூடுகை)

**அக்டோபர் 31**
வியாழக்கிழமை (தீபாவளி தினத்தன்று)

காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை

## சேலம் மண்டலம்



சகோ. காலேப் மோசஸ்

### சேலத்தில்...

YMCA ஹால் ,
123, பிரட்ஸ் ரோடு,
கலெக்டர் ஆபீஸ் அருகில்,

99620 85523



சகோ. குரூஸ் மாசிலாமணி

### நாமக்கல்லில்...

நாமக்கல் நாகராட்சி மண்டபம்,
சிட்டி யூனியன் வங்கி எதிரில்,
துறையூர் சாலை,
நாமக்கல் பேருந்து நிலையம் பின்புறம்,

99620 85523, 94893 01237,
94886 18305

## திருச்சி மண்டலம்



சகோ. சாம் பிரசாத்

### திருச்சியில்...

YMCA ஹால், G.H. எதிரில்,
புத்தூர், திருச்சி - 17

94897 75075



சகோதரி செல்லாராணி அப்பாத்துரை

### பெரம்பலூரில்...

உலக எழுப்புதல் ஜெப மையம்
M K காம்ப்ளக்ஸ், வெங்கடேசபுரம்,
பேங்க் ஆஃப் பரோடா அருகில்,

97888 12428 / 04328-224428

## ஆந்திரா மாநிலம்



சகோ. இராஜேந்திரன்

### சித்தூரில்...

St. Lukes
Telugu church
பாரிஷ் ஹால், சித்தூர்

94877 34603



சகோ. விஜயகுமார்

### திருப்பதியில்...

உலக எழுப்புதல் ஜெப மையம்,
3வது மாடி,
Unlimited ஷோரூம் எதிர்புறம்,
ஹதிராம்ஜி காலனி

94889 38305

# Revival IGNiTERS Monthly Fellowship

வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## EVERY 1st SUNDAY (6th Oct.)

### MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)
World Revival Prayer Centre,
2nd Floor, Above Balakrishna Farsan Mart,
Opp. Apna Restaurant, Near
Kamarajar School, 90 Feet
Road,9004882470

### VELLORE (3PM)
World Revival Prayer Centre,
Ajantha Mahal, # 3,
6th West Cross Road, Gandhi Nagar
9442885315 | 9442979556

### TIRUPUR (4PM – 6:30PM)
World Revival Prayer Centre,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442885315

### TUTICORIN (3PM – 5:30PM)
World Revival Prayer Centre,
Jehovah Jireh Towers, 51/8D/3,
1st Floor, Tiruchendur Road,
Muniasamypuram
LAND MARK: SOUTH POLICE STATION TO KAMARAJ COLLEGE RD.
9442885315 | 9786212103

### TIRUPATI (3PM)
World Revival Prayer Centre,
Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

## EVERY 2nd SATURDAY (12th Oct.)

### BANGALORE (3PM-5PM)
Telugu Church, #21, Nethaji Road,
Railway Line, Pulikeshi Nagar, Frazer
Town.Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

### MADURAI (3PM -5:30PM)
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza, [Theekadir
Busstop] 41, K.Salai pudur Byepass
Road, Madurai
9750955548

## EVERY 2nd SUNDAY (13th Oct.)

### SANKARANKOIL (2:30PM – 5PM)
World Revival Prayer Centre,
Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

### AMBUR (3PM-6PM)
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

### POLLACHI (3PM TO 6PM)
World Revival Prayer Centre,
Grace Auto 1st floor, 163,
raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

### THANE (5PM - 7:30PM)
R.P. Mangala High School
(Near Railway Station),
Room No.10,
Opp. Bank of Maharashtra,
Thane (East)
9004882470

### THANJAVUR (3PM)
World Revival Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

### KOVILPATTI (2:30PM -5:30PM)
St. Paul's Matriculation School
(Parking area Building)
9677858766 | 9787322334

### ALANGULAM (2:30PM)
D. No. 5/2, Vaanjinathan Street,
North side of TPV Mill,
Thuththikulam Road,
9750955548 | 9965377427

### THENI (2:30PM – 5PM)
World Revival Prayer Centre,
#203, Madurai Road,
Opp. Anantham Silk
Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

### SURANDAI (2:00PM)
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

### SIVAKASI (3PM -5PM)
World Revival Prayer Centre,
HOREB Complex,
1st Floor, P K N Road,
(Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

### SATHANKULAM (3PM -5:30PM)
Hendry Matric
Higher Secondary School,
Mela Sathankulam.
9442885315 | 9786212103

### Namakkal (3PM -5:30PM)
World Revival Prayer Centre,
16B Naveen Nest Apartment,
Podhigai Nagar, 1st street,
Salem Road, Namakkal-637001
9962085523 | 94886 18305

### CHENGALPET (3PM – 5:30PM
Reheboth Church,
Near old bus stand,
9710809626 |9488475315

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex,
Namnadu Textiles
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre, #216,
1st Floor, Near Fire Service,
Gandhiji Road
9750722000

## EVERY 3rd SUNDAY (20th Oct.)

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9047480484

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
9894399599 | 9442885315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor ,
Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur.
9489775075 | 8344119000

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram,
Kadaiyam (via),
Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3 PM)**
World Revival Prayer Centre,
# 5, Gandhi Irwin Road,
Egmore,
(Opp. Railway Station)
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1S.A. Rice Mill Complex, TTP Main Rd,
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station Road, Zion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

**PONDICHERRY (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet, opp. Latha
Steel, E C R Road.
8344433800 | 9442885315

**CHITTOOR (3PM TO 6PM)**
World Revival Prayer Centre
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

## EVERY 4th SATURDAY (26th Oct.)

**PERAMBALUR (5PM -8PM)**
World Revival Prayer Centre,
M K Complex, 71, Venkatesapuram,
Near Bank of Baroda,
Trichy Main Road.
9788788512

## EVERY 4th SUNDAY (27th Oct.)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre
H S R Tower, 2nd Floor,
Near CSI Gowdi Church
9488475315

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar, Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor
305/E, Mith Chauky, Marve Road,
Malad (W)
9664050567 | 9619996976

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre, VK Road.
9442885315

**DHARAPURAM (3:30PM – 6PM)**
2nd Floor, MK Arcade,
Near Bus Stand,
8248283373 | 9442885315

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி

Sathiyam
சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி

காலை 7 மணிக்கு
YouTube YouTube மற்றும் Comforter
Comforter TVயிலும் பார்க்கலாம்.

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல்
இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547

LIVE STREAMING
Revival IGNITERS
ON SUNDAY 27th OCTOBER
Time: 3:00 PM - 5:00 pm

IGNITERS, MONTHLY YOUTH PROGRAM IS
TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK
ON THE LAST SUNDAY OF EVERY MONTH

தகவல்: காலேப்

# இரயில் பயணம்

பாகம்-6

சனிக்கிழமை மாலை ஆண்ட்ரூ தனது வீட்டு பலகணியில் உட்கார்ந்தபடி whatsapp ஸ்டேட்டஸ் பார்த்துக்கொண்டிருந்தான். விக்கியின் வாட்ஸ் அப் ஸ்டேட்டஸில் சோகமான பதிவுகள் மற்றும் காணொளிகள் இருந்ததைப் பார்த்து அவனுக்கு call பண்ணினான்.



**ஆண்ட்ரூ:** (ட்ரிங்... ட்ரிங்... ட்ரிங்... ட்ரிங்...) என்ன... கால் பண்ணா எடுக்க மாட்றான், பெரிய problemஆ இருக்குமோ? என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே, விக்கித் திரும்ப அழைத்தான்.

**விக்கி:** சொல்லு ஆண்ட்ரூ... (சோகமான குரலில்)

**ஆண்ட்ரூ:** ஹாய் விக்கி... எப்படி இருக்க?

**விக்கி:** ஏதோ இருக்கேன்... (விரக்தியாக)

**ஆண்ட்ரூ:** நீ சொல்றத பார்த்தாலே தெரியுது, ஏதோ பிரச்சனைன்னு... என்னான்னு சொல்லு.

**விக்கி:** கொஞ்ச நாளாவே வேலைல pressure அதிகமா இருந்திச்சு. இப்போ, நான் வேலை செய்த ப்ராஜெக்ட்டையே மூடப் போறாங்களாம், எங்க Teamல இருக்கிற 4 பேர வேலய விட்டு அனுப்ப போறாங்களாம்; அதுல என் பேரும் இருக்குன்னு சொல்றாங்க... என்ன பண்றதுன்னே தெரியல.

**ஆண்ட்ரூ:** (அதிர்ச்சியாக) என்ன சொல்ற? ...சரி உன் பேர் இருக்குன்னு சொன்னாங்களா? இல்ல இருக்கலாம்னு சொன்னாங்களா?

**விக்கி:** அதெல்லாம் சொல்லலடா, திங்கட்கிழமை தான் தெரியும்.

**ஆண்ட்ரூ:** டேய் விக்கி, இன்னும் யாருனே சொல்லல... அதுக்குள்ள சோக ஸ்டேட்டஸ்லாம் வச்சிட்டே....

**விக்கி:** கண்டிப்பா பேர் இருக்கும் டா...



**ஆண்ட்ரூ:** விக்கி! இன்றைய காலகட்டத்தில உலகத்திலே எங்க பாத்தாலும் இந்த வேலையிழப்புகள் நடந்து கொண்டுதான் இருக்கு. இந்த வருடத்தில் மட்டும் 1.24 லட்சம் பேர் வேலை இழந்துள்ளனர். இன்னும் சொல்லப்போனா கடந்த ஜுலை மாதம் மட்டும் 34 நிறுவனங்கள் 8000 பேரை வேலையை விட்டு அனுப்பியுள்ளன.

**விக்கி:** எனக்கும் இப்படியொரு நிலமை தான் வரப்போகுது... எனக்கு நிறைய commitments இருக்கு டா...

**ஆண்ட்ரூ:** வேலை போனா கஷ்டம் தான் புரியுது, ஆனா உன்ன வேலைய விட்டு அனுப்புறாங்கன்னு இன்னும் யாரும் சொல்லவே இல்லையே!

**விக்கி:** சரி... இப்போ என்ன பண்றது?

**ஆண்ட்ரூ:** நான் சொன்னா கோபப்படக் கூடாது...

**விக்கி:** என்னன்னு சொல்லு? கோபப்படலாமா, வேண்டாமான்னு பாக்கிறேன்...

**ஆண்ட்ரூ:** நீ ஏன் prayer பண்ணக் கூடாது? ஒரு முறை try பண்ணிப் பாரேன். நானும் உனக்காக Prayer பண்றேன். நம்ம இரண்டு பேரும் சேர்ந்து ஜெபம் பண்ணினா கண்டிப்பா உனக்கு நல்லது நடக்கும்.

**விக்கி:** (விருப்பமில்லாமல் வேறு வழியின்றி சரி என்று சொன்னான். ஆண்ட்ரூ அவனுக்காகச் சிறிய ஒரு ஜெபம் செய்தான்.





**(அடுத்த நாள் இருவரும் சர்ச்சுக்கு சென்றார்கள்.)**

**ஆண்ட்ரூ:** இப்போ எப்படி டா இருக்கு விக்கி?

**விக்கி:** மனசுக்கு கொஞ்சம் ஆறுதலா இருக்கு... நான் நெனச்ச மாதிரி ரொம்ப மோசமா இல்ல...

**ஆண்ட்ரூ:** நீ ஒன்னும் கவலைப்படாத டா... நாளைக்கு நல்லதே நடக்கும்.

(ஆறுதலான வார்த்தை சொல்லி அனுப்பினான் ஆண்ட்ரூ. அப்படியே இரண்டு பேரும் விடை பெற்று சென்றனர்)

கேரளா மாநிலம் - இடுக்கி மாவட்டத்தில்...

# வாலிபர் எழுப்புதல் கூடுகை

நாள்: **நவம்பர் 16,** (சனிக்கிழமை)
நேரம் : காலை 10 மணி முதல்
மதியம் 2 மணி வரை

இடம்: LIBRARY HALL,
பள்ளிக்குன்னு

தேவ செய்தி: **சகோ. சதீஷ்குமார்**



தொடர்புக்கு : 89210 30029 / 99471 06507

தகவல்: வயலா

# NISUIN BERIYTH

(திருமண உடன்படிக்கை)

பகுதி - 9

## திருமணத்தின்போது கண்டிப்பாகச் செய்யக் கூடாதவை

### அந்நிய நுகத்திலே பிணைக்கப்படுதல்

"அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக" (2 கொரி. 6:14)



நுகம் என்றால் என்ன? மாட்டு வண்டியைப் பார்த்திருப்பீர்கள். அதில் இரண்டு மாடுகளை இணைக்கவும், வண்டியை இழுக்கவும், மாடுகளின் மேல் வைக்கப்படும் மரக்கட்டையினால் ஆன அந்தச் சுமைக்குப் பெயர் தான் நுகம். பொதுவாக நுகத்தில் பாரம் இருக்காது. ஆனால் அது இணைக்கப்பட்டிருக்கும் வண்டியின் பாரம் தான் கடினமாக இருக்கும். எனவே இரண்டு மாடுகள் சேர்ந்தால் தான், வண்டியைச் சுலபமாக இழுக்க முடியும். இதற்கு முரணாக ஒரு மாடும், ஒரு கழுதையையும் இணைத்து நுகம் பூட்டினால், அந்த வண்டியின் நிலமை எவ்வாறு இருக்கும் என்று சற்று சிந்தித்து பாருங்கள். இரு விலங்குகளின் திறன், உணவுப் பழக்கம், நடக்கும் விதம் போன்றவை முற்றிலும் வேறுபடும் அல்லவா!

இதுபோன்றே, கிறிஸ்தவ திருமண வாழ்வில் ஒரு விசுவாசி மற்றொரு அவிசுவாசியுடன் பிணைக்கப்படக் கூடாது என வேதம் அறிவுறுத்துகிறது.

இன்று அநேக வாலிப பிள்ளைகள் நாகரீகம் என்ற பெயரில் உடன் பயிலும் அல்லது உடன் பணியாற்றும் எதிர்பாலருடன் ஒன்றாகப் பயணிப்பதும், அதிக நேரம் உரையாடுவதும், கேட்டால் நண்பர்கள் என்று சொல்வதும் பின் நாட்களில் திருமணம் செய்து கொள்வதும் சர்வ சாதாரண விஷயமாகி விட்டது. உணவு முறைகள், உடுத்தும் முறைகள், வாழும் முறைகள் போன்றவை முற்றிலும் மாறுபடும்போது வாழவே சிரமப்படுகின்றனர். சில காரியங்களை அனுசரித்து போகலாம். ஆனால் இறை வழிபாடு, ஆலயக்காரியங்கள் போன்றவை மாறுபடும்போது, அது அந்த நபரையும், அவர் குடும்பத்தையும் பாதிப்பது மட்டுமல்லாமல், அதையும் தாண்டி அவர்களைப் படைத்த தேவனையும் பாதிக்கின்றது. தன் பிள்ளைகள் தன்னை மட்டும் வழிபடுவதையே தேவன் விரும்புகிறார். கனத்துக்குரியவைகள் அல்லாதவற்றிற்கு தன் பிள்ளைகள் கனத்தைக் கொடுப்பதை அவரால் ஏற்றுக் கொள்ளவே முடியாது. மனிதர்களின் பகைமையை சம்பாதித்தாலே பாதுகாப்பற்ற வாழ்வு உண்டாகிறது. வானத்தையும், பூமியையும் அதன் அண்ட சராசரங்களையும் உண்டாக்கிய தேவனைப் பகைத்து அந்நிய நுகத்திலே பிணைப்பட்டு விட்டால், அதன்பின் நல்வாழ்வு என்று எண்ணுவதற்கு என்ன இருக்கிறது?

## ஒப்பந்த திருமணங்கள்

ஒரு வாலிபன் தனது வயது சென்ற தாயாரை பார்த்துக் கொள்வதற்கு தன் வீட்டிற்கு ஒரு பெண் தேவை, எனவே தான் ஒப்பந்த திருமணம் செய்வதாகவும், தன் தாயாரின் காலத்திற்கு பிறகு தனக்கு யாரும் தேவையில்லை. எனவே எப்பொழுது வேண்டுமானாலும் அந்த உறவைத் துண்டித்துக் கொள்வேன் என்றும் பெருமிதமாகக் கூறிக் கொண்டான்.



திருமணத்தின்போது தம்பதிகள் பெறக்கூடிய சட்டப்பூர்வ உரிமைகளைத் தேர்ந்தெடுத்து கட்டுப்படுத்தும்படி ஒப்பந்த திருமணங்கள் செய்யப்படுகின்றன. சொத்துப் பிரிவைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள், ஓய்வூதியப் பலன்கள், சேமிப்புகள் மற்றும் ஜீவனாம்சம் பெறுவதற்கான உரிமை போன்ற பல இயல்புநிலை திருமணச் சட்டங்களை முறியடிக்கத் தம்பதிகள் எழுத்துப் பூர்வ திருமண ஒப்பந்தத்தில் ஈடுபடுகின்றனர்.

## தன்பாலின திருமணங்கள்

இது ஒரே பாலினத்தைச் சேர்ந்த இருவரின் திருமணம் ஆகும். 2024ம் ஆண்டு நிலவரப்படி ஒரே பாலின ஜோடிகளுக்கு இடையேயான திருமணம் 36 நாடுகளில் சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது முற்றிலும் வேதத்திற்கு முரணானது. ஜனங்கள் தேவனை அறிந்தும் அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தவில்லை. அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ளவைகளுக்கு ஒப்பாக்கினார்கள். சிருஷ்டிகரை தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள். இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக் கொடுத்தார். அப்படியே ஆண்களும், பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர்மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள் என்று வேதம் கூறுகிறது (ரோமர் 1:20-32).

**அன்பு தேவ பிள்ளைகளே, ஆதியிலே தேவன் ஏற்படுத்திய திருமண உடன்படிக்கை, மெய்யான தேவ சமாதானத்தையும், பரிபூரண ஆசீர்வாதத்தையும் கொடுக்கக் கூடியது. தேவனால் ஏற்படுத்தப்பட்ட இந்தத் திருமண உடன்படிக்கையை தம்பதிகள் தெரிந்தெடுத்து சந்தோஷமாக வாழ்வதை விரும்பாத சத்துருவானவன் தேவனுக்கு பிரியமில்லாத பலவித திருமண காரியங்களை உருவாக்கி ஜனங்களைத் திசைத்திருப்ப முயற்சிக்கின்றான். கர்த்தருடைய பிள்ளைகள் இதனை உணர்ந்து, கவனமாய் தேவன் ஏற்படுத்திய திருமண உடன்படிக்கையை சரியாய் கண்டறிந்து சந்ததி, சந்ததிக்கு ஆசீர்வாதத்தை உரித்தாக்குவீர்களாக.**

நிசுயின் பெரீத் தொடரும்...



# செய்திகள் !

## அடுத்த 3 ஆண்டுகளுக்கு இந்திய பொருளாதார வளர்ச்சி 6%-க்கு அதிகமாக இருக்கும்:

### உலக வங்கி தகவல்



உலகின் மிக வேகமான வளர்ச்சி காணும் பொருளாதாரமாக இந்தியா மாறியுள்ளது. வேலை வாய்ப்புச் சந்தை மேம்பட்டுள்ளது மற்றும் வலுவான சேவை வர்த்தகம் காரணமாக இந்தியா 2023-24 நிதியாண்டில் 8.2 சதவீத பொருளாதார வளர்ச்சியைத் தக்க வைத்தது.

இந்த நிலையில், நடப்பு நிதியாண்டுக்கான பொருளாதார வளர்ச்சி 6.6 சதவீதமாக இருக்கும் என முந்தைய மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்ட நிலையில் அது தற்போது 7 சதவீதத்தை எட்டும் என உலக வங்கி உயர்த்தி மதிப்பிட்டுள்ளது. பணவீக்கம் குறைந்து வரும் நிலையில் வலுவான பொருளாதார வளர்ச்சி வறுமையின் தீவிரத்தன்மையை குறைக்க உதவும் என்றும் அடுத்த 3 ஆண்டுகளுக்கு இந்தியாவின் வளர்ச்சியானது 6 சதவீதத்துக்கும் அதிகமாகவே இருக்கும் என்றும் உலக வங்கி மதிப்பிட்டுள்ளது.

பொது உள்கட்டமைப்பு முதலீடு, ரியல் எஸ்டேட் துறை முதலீடு நாட்டில் அதிகரித்துள்ளது. அதே நேரம், உற்பத்தி துறையின் வளர்ச்சியும் 9.9 சதவீதமாக உள்ளது. பின்தங்கியுள்ள விவசாயத்துறையின் வளர்ச்சியை நெகிழ்ச்சியான சேவை துறையின் வளர்ச்சி ஈடு செய்துள்ளது. நாட்டின் முன்னேற்றத்துக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கி உள்ளதாக உலக வங்கி கூறியுள்ளது.

- 04 செப்டம்பர் 2024, தி இந்து தமிழ் திசை.

## உக்ரைனின் ராணுவ பயிற்சி மையம் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்: 41 பேர் பலி



உக்ரைன் – ரஷ்யா போர் 3வது ஆண்டாக நீடித்து வருகிறது. இந்தப் போரில் உக்ரைனின் பல நகரங்கள் சிதிலமடைந்து விட்டன. இந்தப் போரில் ஆரம்பத்தில் பலத்த அடி வாங்கிய உக்ரைன் தற்போது ரஷ்யா மீதான தாக்குதலைத் தீவிரப்படுத்தி உள்ளது. இதனால் ஆத்திரமடைந்துள்ள ரஷ்யா, உக்ரைன் மீது தொடர் தாக்குதல்களை நடத்தி வருகிறது. உக்ரைனின் மத்திய கிழக்கு உக்ரைனின் பொல்டாவா நகரில் உக்ரைனின் ராணுவ பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது.

இதன்மீது ரஷ்யா நேற்று (செப். 3) நள்ளிரவு பாலிஸ்டிக் ஏவுகணைகளை வீசிப் பயங்கர தாக்குதல் நடத்தியது. இதேபோல் ராணுவ பயிற்சி மையத்தின் அருகில் உள்ள மருத்துவமனைமீதும் ரஷ்யா பாலிஸ்டிக் ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதல்களில் நோயாளிகள் உள்பட 41 பேர் உயிரிழந்தனர். மற்றும் 180 பேர் படுகாயமடைந்தனர்.

- 04 செப்டம்பர் 2024, தினகரன்.

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

தகவல்: காட்வின்




## TECH - 9

# கைபேசியை கையாளு!

**வணக்கம் நன்பர்களே...!** மீண்டும் உங்களை இந்தக் கட்டுரைமூலம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி. தொழில்நுட்ப உலகின் வளர்ச்சி நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நாமும் அதன் வளர்ச்சியில் ஒருவராகப் பங்கேற்று வருகிறோம். காய்கறி வாங்கும் கடையிலிருந்து கார்வாங்கும் showroom வரை நாம் தொழில் நுட்பத்தின் உதவியை நாடி உள்ளோம். படிக்கும் குழந்தைகளுக்கும் படிப்பைச் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கும் தொழில் நுட்பம் அவசியமாய் உள்ளது. சமீப காலமாக AI தொழில் நுட்பம் அனைவரையும் கவர்ந்து வருகிறது. மனிதனின் மூளை போலவே சிந்தித்து செயல்படக்கூடிய ஆற்றலை வெளிப்படுத்தும் வகையில் இது உருவாக்கப்பட்டு வருகிறது. நம்மில் பலரும் இந்த Artificial Intelligence தொழில்நுட்பத்தின் வளர்ச்சியைக் கண்டு வியப்படைந்திருப்போம். நாம் கேட்கும் கேள்விகளுக்கு அவை துல்லியமாகப் பதில் அளிக்கும். தினசரி வேலைகளில் உதவும் "ChatGPT" போன்ற தொழில்நுட்பங்கள் நமக்கு மிகவும் உதவிகரமானதாக இருக்கின்றன.

Facebook நிறுவனமானது 2012ம் ஆண்டில் இன்ஸ்டாகிராம் மற்றும் 2014ம் ஆண்டு whatsapp ஆகிய நிறுவனங்களைச் சொந்தமாக வாங்கினது. எனவே 2021ம் ஆண்டிலிருந்து இந்தச் சமூக வலைத்தளங்களை நிர்வகிக்கும் நிறுவனமாக META (மெட்டா) எனப் பெயர் மாற்றப்பட்டது. 2024ம் ஆண்டிலிருந்து META AI என்ற செயற்கை நுண்ணறிவு திறன் META நிறுவனத்தின் சமுக வலைத்தளங்களில் கொண்டுவரப்பட்டது. இப்போது உங்கள் whatsappலும் AI அம்சம் கிடைக்கும் வகையில் மெட்டா நிறுவனம் தனது தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது. இதனால் என்ன பலன்கள்? இதை எப்படி பயன்படுத்துவது? என்பதை இந்த மாதம் பார்ப்போம்.

முன்னதாக Meta AI நியூசிலாந்து, கனடா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் மட்டுமே கிடைத்தது. தற்போது நீங்கள் வாட்ஸ் அப், பேஸ்புக், இன்ஸ்டாகிராம் போன்ற செயலிகளில் AI chatbotஐ பயன்படுத்தலாம். உங்கள் ஆர்வங்கள் மற்றும் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு புதிய தகவல்கள், வீடியோக்கள் மற்றும் பிற Post-களைக் கண்டறிய Meta AI உங்களுக்கு உதவும். வெளிநாட்டு நண்பர்களுடன் சேட்டிங் செய்யும்போது அவர்களுடைய மொழியைப் புரிந்து கொள்ள Meta AI உங்களுக்கு உதவும். உங்கள் எண்ணங்களை டெக்ஸ்ட்(Text) வடிவில் என்டர் செய்தால் Meta AI உங்களுக்குப் படங்களை உருவாக்கித் தரும். ஆங்கிலத்தில் மெயில் எழுதுவது சிலருக்குக் கடினமாக இருக்கலாம். இது போன்ற உதவியைப் பெறவும், நீங்கள் Meta AI-ஐப் பயன்படுத்தலாம்.

### Meta AIஐ எவ்வாறு பயன்படுத்துவது என்று கேட்கிறீர்களா?

வாட்ஸ்அப் செயலியைத் திறந்தவுடன், கீழ் வலது மூலையில் அமைந்துள்ள ''ப்ளூ ரிங்'' ஐகானைக் காண முடியும். பிளே ஸ்டோரிலிருந்து வாட்ஸ்அப்-ஐ அப்டேட் செய்தபிறகு, இந்த ஐகானைக் கிளிக் செய்தால், புதிய chat திறக்கும். இதைப் பயன்படுத்தி உங்கள் கேள்விகளை நீங்கள் Meta AI-யிடம் கேட்கலாம்.

**உங்கள் படிப்பு மற்றும் வேலை தொடர்பான கேள்விகளை நீங்கள் Whatsapp செயலியிலேயே கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். உலகின் பல கண்டுபிடிப்புகள் நம் நன்மைக்காகக் கண்டுபிடிக்கப்பட்டாலும், அதைச் சரியான முறையில் கையாண்டால் தான் நாமும் பிரகாசிக்கிறவர்களாக ஜெயிக்கிறவர்களாக மாற முடியும்!**

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 09 -2024
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.



# கைக்கொடுத்த கல்வி!



சாதனை: சுமா

**இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள்! ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் எல்லாரிடமும் இருக்கும். இந்த எண்ணம் மட்டுமே இருக்கும் எல்லாரும் சாதித்திட முடியாது. என்ன நடந்தாலும் அதைச் சவாலாக ஏற்றுக் கொண்டு அனுதினமும் கடுமையாக உழைப்பவர்களால் மட்டுமே சாதிக்க முடியும். அப்படி கடுமையாக உழைத்துச் சாதித்த சாதனையாளரின் வாழ்க்கை பயணத்தைப் பார்ப்போம்.**

ஜெய் சௌத்ரி ஹிமாச்சல பிரதேசத்தில் உள்ள ஒரு குக்கிராமத்தில் மின்சாரம், குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள்கூட இல்லாத விவசாயக் குடும்பத்தில் பிறந்து வளந்தவர். பள்ளிக்குத் தினமும் நான்கு கிலோ மீட்டர் நடந்து சென்று வருவார். வீட்டில் மின்சாரம் இல்லாததால் பள்ளியில் அமர்ந்து அனைத்து பாடங்களையும் படித்து விட்டு வீட்டிற்கு வருவார். கடினமாக உழைத்துப் பள்ளிப் படிப்பை முடித்தபிறகு, வாரணாசியில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தில் (IIT) தனது பொறியியல் பட்டத்தை முடித்தார். முதன்முறையாக 20வது வயதில் அமெரிக்கா சென்று அங்கே பொறியியல் மற்றும் மேலாண்மையில் மாஸ்டர்ஸ் பட்டம் பெற்றார்.




கல்வியை முடித்ததும், சௌத்ரி தனது தொழில் பயணத்தை IBM, Unisys, மற்றும் IQ Software போன்ற நிறுவனங்களில் தொடங்கினார். இருபது ஆண்டுகால தொழில்நுட்ப அனுபவம் பெற்ற அவர் மற்றும் அவரது மனைவி ஜோதி, தங்களது முதலீடுகளைப் பயன்படுத்தி 1996-ஆம் ஆண்டில் முதல் startupஆன SecureIT-ஐ துவங்கினர். பின்னர் அவர் CoreHarbor, CipherTrust, மற்றும் AirDefense உள்ளிட்ட பல நிறுவனங்களையும் தொடங்கி, சைபர் பாதுகாப்பை உருமாற்றும் தனது கனவிற்கு மேலும் ஒருபடி அருகே சென்றார்.

2008-ஆம் ஆண்டில் சௌத்ரி Zscaler என்ற நிறுவனத்தைத் துவங்கி இணைய பாதுகாப்பில் புரட்சியை ஏற்படுத்தினார். Cloud security solutions கொண்டு Zscaler 5,000-க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களைக் கவர்ந்ததுடன், 2,600-க்கும் மேற்பட்ட பணியாளர்களை உலகளவில் வேலை வாய்ப்புடன் இணைத்துள்ளது. Nasdaq பங்குச்சந்தையில் $15 பில்லியன் மதிப்பைக் கொண்டுள்ள Zscaler நிறுவனம் சௌத்ரியின் முன்நோக்கிய திட்டங்கள் மற்றும் தலைமைத்துவத்தை பிரதிபலிக்கிறது.

சௌத்ரியின் தொழில் வெற்றிகள் அவரை உலகின் செல்வந்தர்களில் ஒருவராக உயர்த்தின. 2020-ஆம் ஆண்டில் அவர் அமெரிக்காவின் செல்வந்தர் 400 பேரின் பட்டியலில் 85-வது இடத்தைப் பெற்றார். 2021-ஆம் ஆண்டில், இந்தியாவின் ஒன்பதாவது செல்வந்தராகவும், சுமார் ₹70,392 கோடி (சுமார் $5.9 பில்லியன்) நிகர மதிப்புடன், அவருக்கு அங்கீகாரம் கிடைத்தது. நண்பர்களே, ஜெய் சௌத்ரியின் வாழ்க்கை பயணம் கற்றுத் தரும் ஒரே விஷயம் கல்வி மற்றும் கடின உழைப்பு.

**படிக்கிற காலத்தில் நன்றாகப் படியுங்கள். உங்கள் இலக்கை அடைய கடினமாக உழையுங்கள். கவனத்தை எப்பொழுதும் சிதற விடாதீர்கள். சௌத்ரியின் வெற்றி பயணம் படிக்க எளிதாக இருக்கலாம். ஆனால் அவர் வெற்றி அடைய எடுத்து வைத்த ஒவ்வொரு அடியும் கடினமானவை. தொடர்ந்து முயற்சியுங்கள், நீங்களும் ஒருநாள் சாதனையாளர் ஆகலாம்!**